விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 ஆடி 2 ஷவ்வால் 18 இதழ் 154
யாழ்ப்பாணம் புதன்கிழமை 18-7-84

திருமலை, பட்டிருப்பு இடைத்தேர்தல்:

## கூட்டணி ஆராயும்!

[யாழ்ப்பாணம்]

திருகோணமலை, பட்டிருப்பு தொகுதிகளில் இடைத்தேர்தல் விரைவில் நடத்தப்படும் என்ற அறிவிப்புத் தொடர்பாகக் கூட்டணியின் நிலைபற்றி இம்மாதம் 21ம் திகதி நடைபெறும் கூட்டணி பொதுச்சபைக் கூட்டத்தில் ஆலோசிக்கப்படும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி நிர்வாகச் செயலாளர் திரு. எம். ஆலாலசுந்தரம் மேற்கண்டவாறு நேற்றுத் தெரிவித்தார்.

பொதுச்சபைக் கூட்டத்திற்கான அழைப்பு, உறுப்பினர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் பொதுச்சபையில் இன்றுள்ள நிலைமை பற்றி ஆராயப்படும் என்றும் அவர் கூறினார். (க)

## 'அமிர்' இன்று யாழ். வருகிறார்

(கொழும்பு)

தமிழர்விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று கொழும்பு வந்துசேர்ந்தார்.

இன்று நண்பகல் திரு. அமிர்தலிங்கம் யாழ்ப்பாணம் வருகிறார்.

இம்மாதம் 21ம் திகதி நடைபெறவுள்ள கூட்டணி பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளவிருக்கும் திரு. அமிர்தலிங்கம், இவ்வாரம் முழுவதும் யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பார்.

# "யாழ்ப்பாண உண்மைநிலையை தெற்கில் விளக்குவோம்"

## தொலைத் தொடர்பு சீரானது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையேயான தொலைத்தொடர்பு நேற்று ஓரளவு சீரானது.

## அமைதிச்சூழ்நிலைகாண்பதே எமது முக்கிய நோக்கம்"

### யாழ்.நகரில் ஐக்கிய சமய ஸ்தாபனப்பிரதிநிதிகள் கருத்து

(கா. யோகநாதன்)

''யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள நிலைமைகளை நேரில் அறிந்து, அவற்றை இதுவரை அறிந்துகொள்ளாத தென்பகுதி மக்களுக்கு எடுத்து விளக்கிக் கூறி, அமைதியான சூழ்நிலையை நாட்டில் மீண்டும் ஏற்படுவதற்கான வழிவகைகளைக் காண்பதே எங்கள் முக்கிய நோக்கமாகும்'' என்று யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடந்த சமய ஸ்தாபனப் பிரதிநிதிகளின் கூட்டத்தில் உரையாற்றிய ஐக்கிய சமய ஸ்தாபனக் குழுத் தலைவர் வண. திஸ்ஸ பாலசூரியா கூறினார்.

இக்கூட்டத்தில் ஐக்கிய சமய ஸ்தாபனக் குழுவின் பதினொரு பிரதிநிதிகளும், ஆறுமுக நாவலர் சபை சார்பில் திரு. சிசுவலிங்கமும், சுப்பிரமுனிய சுவாமி ஆச்சிரமம் சார்பில் திரு. சண்முகசுந்தரமும், திவ்யஜீவன சங்கச் செயலாளர் திரு. இ. வைத்திலிங்கமும், விஷ்வ இந்து பரிஷத் சார்பில் திரு. டீ ராஜேந்திராவும், இந்து மகளிர் மன்ற சார்பில் திருமதி அஞ்சலருமும், பிஷப் அம்பலவாணர், வண. பிதா மைக்கல்சாமி ஆகியோரும் மற்றும் சமயத் தலைவர்களும் கலந்துகொண்டனர்,

வண. பிதா போல் கஸ்பஸ் பேசுகையில், ''நாட்டில் அமைதியான சூழநிலையை மீண்டும் ஏற்படுத்துவதற்கு எப்படியான தீர்வு வழிகாட்டுமென்பதை முடிவுசெய்யும் நிலையில் இருக்கிறோம்'' என்றார்.

ஞானவாசதேரோ பேசுகையில்; ''இங்குள்ள நிலைமைகளை நேரில் அறியவந்திருக்கும்

(8ம் பக்கம் பார்க்க)

## விமான நிலையம் பாதுகாப்பு ஜரூர்!

(கொழும்பு)

கொழும்பு (கட்டுநாயக்கா) சர்வதேச விமான நிலையத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன!

விமான நிலையத்தில் பொது மக்கள் தங்கி நிற்கும் இடமும் மட்டுப்படுத்தப் படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விமான நிலையத்தில் பயணிகளை வழியனுப்புவதைத் தவிர்த்து வீடுகளிலோ அல்லது விமான நிலைய வளவிற்கு வெளியிலோ விடைகொடுக்குமாறும் கேட்கப்பட்டுள்ளதுடன் பயணிகளை வழியனுப்பவோ அல்லது வரவேற்கவோ ஒரு பயணிக்கு ஒருவர் என்ற முறையிலேயே அனுமதி வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாவனைக்குதவாத சீனி

(கொழும்பு)

பாவனைக்குதவாத சீனி, உள்ளூர் சந்தையில் விற்கப்படுவதால் இந்தச் சீனியை வாங்க வேண்டாம் என்று வர்த்தக அமைச்சர் திரு. எம். எஸ். அமரசிறி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## வண. பாலசூரியா குழு யாழ். விஜயம்

### பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்திப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள நிலைமையை நேரில் அறிந்து, தென்பகுதி மக்களுக்கு விளக்கிக்கூறி நாட்டில் அமைதியான சூழ்நிலையை உருவாக்குவதற்காக வண. பிதா பாலசூரியா தலைமையில் பதினொருபேர் கொண்ட சமாதானக்குழு ஒன்று மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வந்துள்ளது.

ஐக்கிய சமய ஸ்தாபனத்தைச் சேர்ந்த இக்குழுவில் வண. பிதா பாலசூரியா, வண. பிதா போல் கஸ்பஸ்,

(8ம் பக்கம் பார்க்க)

## "இந்திய உபஜனாதிபதியாக தமிழர் தெரிவாகவேண்டும்!"

### மத்திய அரசிடம் எம். ஜி. ஆர் கோரிக்கை

(சென்னை)

"இந்திய உப ஜனாதிபதியாகத் தமிழ் நாட்டிலிருந்து ஒருவர் தெரிவுசெய்யப்படுவதில் மத்திய அரசாங்கம் அக்கறைகாட்டவேண்டும்'' என்று தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் நேற்றுமுன்தினம் சென்னையில் இடம்பெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசும்போதே மேற்கண்டவாறு தாம் மத்திய அரசாங்கத்தைக் கேட்டுள்ளதாகக் கூறினார்.

இந்திய உப ஜனாதிபதி திரு. ஹிதாயத்தொல்லாவின் பதவிக்காலம் முடிவடைகின்றது. இதைத் தொடர்ந்து இப்பதவிக்குப் புதியவர் ஒருவரைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல் இம்மாத இறுதியில் இடம்பெறவுள்ளது. எனவே இத்தேர்தலில் தமிழகத்தைச் சேர்ந்த தமிழ ஒருவர் உப ஜனாதிபதியாக்கப்பட வேண்டுமென்பதில் திரு. எம். ஜி. ராமச்சந்திரன். ஆர்வங்காட்டுகின்றார்.

திரு. எம். ஜி. ராமச்சந்திரன் இக்கூட்டத்தில் மேலும் பேசுகையில், ''மறைந்த தலைவர் காமராஜரின் சகோதரிக்கு வழங்கப்பட்டுவந்த தமிழகஅரசின் உதவிப் பணம் ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்படும். காமராஜர் பெயரில் மாவட்டமொன்று அமைக்கப்பட்டது போன்று அறிஞர் ராஜாஜி பெயரிலும் மாவட்டமொன்று நிறுவப்படும்'' என்றார்.

## பொலிஸ்ஜீப்மீதுகுண்டுவீச்சு;

### நால்வர் காயம், நகரில் பரபரப்பு!

(ஏ. வி மாணிக்கம்)

யாழ். நகரில் ரோந்துசேவையிலீடுபட்டிருந்த ஜீப் வண்டி மீது இனந்தெரியாத நபர்கள் வீசிய குண்டினால், நான்கு பொலிஸ்கான்ஸ்டபிள்கள்காயமடைந்தனர். ஜீப் வண்டியும் சேதமடைந்து சரிந்த நிலையில் காணப்பட்டது.

இக்குண்டுவீச்சு சம்பவத்தின்போது பின்னால் வந்துகொண்டிருந்த ஜீப் வண்டியிலிருந்த பொலிஸ் அதிரடிப் படையினர் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர்.

நேற்றுக்காலை10-30மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றதால் யாழ். நகரில் வழக்கம்போல் நிறைந்திருந்த சனக்கூட்டத்தினர் நாலாபக்கமும் சிதறி ஓடத்தொடங்கினர்.

### நகர் வெறிச்சோடியது

மினிபஸ்கள், டாக்ஸிகள், மற்றும் சகல வாகனங்களும் தத்தம் இடம்நோக்கி அதிவேகமாகச் செல்லத்தொடங்கின.

சகல கடைகளும் அவசரமவசரமாகஇழுத்துப்பூட்டப்பட்டு நகர் வெறிச்சோடியது

இக்குண்டுவீச்சு சம்பவம், யாழ் ஆஸ்பத்திரி வீதியில் கஸ்தூரியார்வீதிச் சந்திக்கு மேற்குப்பக்கமாக சற்றுத் தூரத்தில் நடைபெற்றது.

(8ம் பக்கம் பார்க்க)

## ராஜராஜசோழன் விழாவில் இந்திரா கலந்துகொள்வார்!

சென்னை ஜூலை 17

அடுத்த மாதம் தஞ்சையில் நடைபெறவுள்ள தஞ்சை ராஜராஜ சோழனின் 1,000 வது ஆண்டு விழாவில் கலந்துகொள்ள இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி இணக்கப் தெரிவித்துள்ளார்.

இத்தகவலை தமிழ்நாடு நிதியமைச்சர் திரு. வி. ஆர் நெடுஞ்செழியன் தெரிவித்தார். (வெ

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

வல்வெட்டித்துறை சிவன் கோவில் வீதியிலுள்ள ''கலா பவனம்'' வீடும்' காணியும் (சகலவசதிகளுடன்) விற்பனைக் குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். 910

6 ஸ்ரீ டட்சன் சனி 1200 C. C. வனுக்கு 45 மைல் ஓடக்கூடியது உடன் விற்பனைக் குண்டு. அம்மன் ஹாட்வெயஸ் 23/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப் பாணம். 888

Northtown 4 நாள் சேவல் குஞ்சு 1-65 வெள்ளை பேட்டுக் குஞ்சு 8-75 குரஸ் பிறலேஸ் 4-50. ''ராதாகிருஷ்ணஸ்'' 392, நாவலர் ரோட், கயிலாச பிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம். [921]

சுன்னாகம் டாக்டர் சுப்பிர மணியம் வீதியில் நான்கு நிலப்பரப்புக் காணி விற் பனைக்குண்டு. தொடர்பு: வி. கோபாலகிருஷ்ணன், நாகேஸ்வரி வித்தியாலய வீதி, பருத்திக்கலட்டி, சுன்னாகம். [923]

வீடு, கிணறு, 70 தென்னை களுடன் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு- பாலசிங்கம், உடையார் ஒழுங்கை, ஜயனர் கோவிலடி, யாழ்ப்பாணம். 926

நல்ல இன அல்ஷேசன் நாய்க்குட்டிகள் [ஒரு மாதம்] (Pure Bred Alsation) உடன் விற்பனைக்குண்டு. 58, சங்கிலி யன் வீதி, நல்லூர். 922

நீர்வேலி அச்செழு வீதியில் வீட்டுடனன 12பரப்புக்தோட் டக்காணி உடன் விற்பனைக் குண்டு. தொடர்பு- மல்ரி சேவி சஸ், 37(351) மணிக்கூட்டுவீதி, (வெலிங்டன்தியேட்டர் சந்திக் கருகாமையில்) யாழ்ப்பாணம். தொலைபேசி, 22762. 936

மூளாய்ப்பிள்ளையார் கோவி லுக்கு அருகாமையில் வீடு கட்டுவதற்குகந்த தென்னை மரங்கள் அநேகமாகஉள்ள 9பரப்புக்காணி (கிணற்றுடன்) விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆ. சுப்பையா. இளைப்பாறிய ஆசிரியர், ஜயனுர் ஆலய வீதி, மூளாய் தெற்கு, சுழிபுரம். 933

சித்தங்கேணி - பண்டத் தரிப்பு பிரதான வீதியில் 2 பரப்பு 5 குளியில் அடங்கிய விடு (சந்தை, மகளிர் கல்லூரி, இந்துக்கல்லூரி. பெரிய தபாற் கந்தோருக்கு அண்மையில் உள்ளது), விற்பனைக்குண்டு. தொடர்பு: Dr. S. V, செல் லையா, முருகானந்த வைத் தியசாலை, சங்கானை மேற்கு, பண்டத்தரிப்பு. தொடர்பு கொள்ளும் நேரம்: காலை 10 மணி தொடக்கம் பிற்பகல் 1-30 மணிவரை. 948

சாவகச்சேரி கல்வயல் பெருங் குளம் வீதியில் இரண்டாம் ஒழுங்கையில் (9 பரப்பு— 6 பரப்பு) இரண்டு வளவுக் காணிகள் விற்பனைக்குண்டு. தென்னை, மா மரங்கள், தண் ணீர் கிணற்று வசதியுடன் குடி யிருக்க வசதியானதும், பஸ் பாடசாலை கொண்ட டதுமாகும். விபரங்களுக்கு: கந்தையா பொன்னம்பலம், முன்னாள் நகரசபை உறுப் பினர், கல்வயல், சாவகச் சேரி. 931

மாக்கற் ஈஸ்றலேன், மானிப் பாயில் 18 பரப்பு, 3 பரப்புக் காணிகள் (வீடு கட்டவோ, தொழிற்சாலை போடவோ உகந்தது) விற்பனைக்குண்டு. தொடர்பு பிருன்சிஸ் 97, சென் பற்றிக்ஸ் ரோட், யாழ்ப்பா ணம். 946

## தேவை

சுத்தமான வேப்பம் விதை யும் இலுப்பம் விதையும் தேவை. மில்க்வைற், யாழ்ப் பாணம். 935

Mechanical Draughtsman பதவிக்கு வெற்றிடம் உள்ளது. 21ம் தேதிக்கு முன் விண்ணப் பிக்கவும். டைனமிக் என்ஜினி யரிங் லிமிற்றெட், 43, பாங் ஷால் வீதி, யாழ்ப்பாணம். 937

ரேடியோ திருத்துவதில் அனுபவமும், திறமையுமிக்க (Radio Technicians) சம்பளம் 1,000/- — 1500/-. ரேடியோ உபஉறுப்புக்கள் விற்பனை யில் அனுபவம்மிக்க விற்பனை யாளர்கள் தேவை. சம்பளம் 750/- — 1,000/- உடன் தொடர்புகொள்ளவும். Expo Electronics, 45, கஸ் தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (918)

### கரைச்சி தெற்கு ப.நோ.கூ. சங்கம்
கிளிநொச்சி

## புடவை விற்பனை

எமது சங்கத்தில் ஐம்ப துக்கு மேற்பட்ட பலரகப் புடவைகள் மலிவுவிற்பனைக்கு பெறக்கூடிய நிலையில் உண்டு.

இதற்கான விபரங்கள் சங் கத்தில் ரூபா 5/- செலுத்தி பெறப்படும் விண்ணப்பப் படி வத்தில் விளக்கமாக உண்டு. பெற விரும்புபவர்கள் இதனை 27.-7-84 க்கு முன் பெற்று தாம் கோரும் விலையைக் குறிப்பிட்டு கடித உறை யிட்டு அதன் இடதுமேல் மூலை யில் புடவை விற்பனை கேள்வி எனக் குறிப்பிட்டு 31-7-84 நண்பகல் 12.00 மணிக்கு முன் ''பொது முகாமையாளர், கரைச்சி தெற்கு ப.நோ.கூ. சங்கம், கிளிநொச்சி'' என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்க லாம்.

பொதுமுகாமையாளர்
14-7-84 909

## வாடகைக்கு

சுண்டிக்குழி கச்சேரிக்கு அரு காமையில் சகல வசதிகளும் கொண்ட வீடு உடன் வாட கைக்கு உண்டு, தொடர்பு; கதிர்காட்வெயஸ் 11/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப் பாணம். தொலைபேசி: 23130. (924)

யாழ். பருத்தித்துறை பிர தான வீதியில் நெல்லியடி பிர தான சந்தியில் உள்ள ஓர் மேல்மாடி வீடு வாடகைக்கு விடப்படும். தனியார் கல்வி நிறுவனம் மற்றும் காரியால யம் போன்றவற்றிற்கு உகந்த இடம். மேலதிக விபரங்க ளுக்கு: க. கந்தவனம், 'கந்த வனம் வாசா', நெல்லியடி, கரவெட்டியில் தொடர்பு கொள்ளவும். 928

## தவறிவிட்டது

ஸ்கூட்டர் பக்கமூடி சந்தி ரம்கொட்டடி வீதியில் விழுந்து விட்டது. கண்டெடுத்துக் கொடுப்பவர்களுக்கு சன்மா னம் உண்டு. தொடர்பு- யோக நாதன், உதவிப்பதிவாளர், யாழ். பல்கலைக் கழகம். 934

சண்டிலிப்பாய்வடக்கில் வசிக் கும் சு. சுத்தானந்தன் ஆகிய நான் எனது சாரதி அனுமதிப் பத்திரத்தையும், அடையாள அட்டையையும் நக்கா வீதி யிலிருந்து ஆனைப்பந்தி சந்திக் கிடையில் தொலைத்துவிட் டேன். கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து செ. சகாதேவன், 29/3, நக்கா வீதி, யாழ்ப் பாணம். 944

### யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுள்ளது) வெற்றுச் சாக்கு

## கேள்வி அறிவித்தல்

எமது சங்கத்தில் 3583 வெற் றுச் சாக்குகள் கேள்வி மூலம் விற்பனைக்குண்டு.

முடிவுத் திகதி:- 23-7-84.

பதில் பொதுமுகாமையாளர்.
127, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்,
13-7-84. 932

## தவறிவிட்டது

மானிப்பாய்க்கும் சுன்னாகத் துக்குமிடையில் 'பிலிமோல்' ஒன்று கடந்த 14ம் திகதி தவறிவிட்டது கண்டெடுத்த வர்கள் விற்ஸ்மன் ரியூட்டறி யில்(மானிப்பாய்) ஒப்படைக்க வும். 927

PHOTO STAT
பிரதிகளுக்கு
கொழும்பு ஸ்ரூடியோ
யாழ்ப்பாணம்

# பதவி வெற்றிடம்

## கணக்குப் பதிவாளர்
## சம்பளத்திட்டம் இல. 301/11

முத்துஐயன்கட்டு ப. நோ. கூ. சங்கத்தால் கணக்குப் பதிவாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் இலங்கைப் பிரசைகளிடம் இருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் 31-7-84க்கு முன்பாக

தலைவர்,
முத்துஐயன்கட்டு ப. நோ. கூ. சங்கம்,
ஒட்டுசுட்டான்.

என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்ப வேண்டும். விண்ணப்பத்துடன் கல்வித்தகமைப் பத்திரம், பிறப்புச்சாட்சிப் பத்திரம் ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சம்பளத்திட்டம்!- 300—15×12, 20×3 — 540.

கல்வித் தகமை:

(அ) கூட்டுறவுப் பணியாளரின் 12-வது சம்பளத்திட்டத்தில் கணக்கியல் பகுதியில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 13-வது சம்பளத்திட்டத்தில் கணக்கியல் பகுதியில் 4 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) க. பொ. த. (சா. த) 2 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம் வர்த்தக கணிதம்/தூயகணிதம், சிங்களம்/தமிழ் பாஷை என்பவற்றினை உள்ளடக்கியதாக 5 திறமைச்சித்திகளுடன் 6 பாடங்களி லான சித்தி.

வயது; 20 தொடக்கம் 35 வரை
(சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை நியதியில்லை)

பிணை; ரொக்கம் ரூபா 1500/-

பொதுமுகாமையாளர்,
முத்துஐயன்கட்டு ப. நோ. கூ. சங்கம்,
ஒட்டுசுட்டான்.

13-7-1984. (940)

# ஓராண்டு நினைவஞ்சலி



கதிரேசு
பொன்னம்பலம்

தோற்றம்: 28-08-1928

மறைவு: 29-07-1983



பொன்னம்பலம்
புஸ்பராஜன்

தோற்றம்: 29-09-1960

மறைவு: 29-07-1983

அன்பிற்கும், பண்பிற்கும். பாசத்திற்கும் உரிய அன்பு உருவங்களே! நீர் சென்றவிடம் ஓர் ருக உயிர்நீத்த உங் களது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், தாய், சகோதரர்,உற்றார்.
புங்குடுதீவு-3 [945]

45 வருடகால
நம்பிக்கைக்குரிய சேவையுடன்
26 %
வட்டி வழங்கும்
இலங்கையில்
மிகப் பழமையானதும்
யாழ்ப்பாணத்தில் தனது
சொந்த நிறுவனத்தில் இருக்கும்
ஒரேயொரு நிதிஸ்தாபனம்
TFC
த பினன்ஸ்
கொம்பனி லிமிட்டட்
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம், தொலைபேசி: 23680
தலைமை அலுவலகம்
3-ம் மாடி,
சிலிங்கோ ஹவுஸ்,
கொழும்பு - 1.
மற்றும் ஏனைய
14 கிளைகள் உண்டு.

# பிரிட்டன் வேலைநிறுத்தம்: ராணுவம் அழைக்கப்படுமா?

**லண்டன், ஜூலை 17**

**பிரிட்டனில் சுரங்கத் தொழிலாளர்கள், துறைமுகத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தங்கள் பிரதமர் திருமதி மார்கிரெட் தாட்சரின் அரசாங்கத்துக்குப் பெரும் நெருக்கடி நிலையைக் கொடுத்துள்ளன. பிரிட்டிஷ் அரசாங்கம் இந்நிலையைச் சமாளிக்க இராணுவத் துருப்புக்களின் சேவையை நாட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.**

சுரங்கத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் கடந்த பத்தொன்பது வாரங்களாகத் தொடர்ந்து இடம் பெறுகின்றது இவர்களுடன் துறைமுகத் தொழிலாளர்களும் கடந்த வாரம்முதல் சேர்ந்து கொண்டனர்

''எமது நடவடிக்கைகள் ஒருமாபெரும் வெற்றியை நோக்கிச் செல்லுகின்றன'' என்று சுரங்கத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்துக்கு தலைமை தாங்கும் ஆர்த்தர் ஸ்கார்ஜில் என்பவர் தெரிவித்துள்ளார்.

இவ்வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டுள்ளதையடுத்து பிரதம மந்திரி திருமதி மார்கிரெட் தாட்சர் பலதடவைகள் தமது வாசஸ்தலத்திலும், பாராளுமன்றத்திலும் அமைச்சரவைச் சகாக்களைச் சந்தித்தார்.

எவ்வகையிலும் இவ் வேலை நிறுத்த நிலைமையைச் சமாளிப்பதென்றும், அவசியமேற்படின் இராணுவத் துருப்புக்களையும் சேவைக்கு அழைப்பதென்றும் அரசாங்கம் முடிவு செய்திருப்பதாக அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

''வேலை நிறுத்தங்கள் நிகழ்ந்தாலும் சகல நடவடிக்கைகளும் பாதிப்படையாது தொடரும்'' என்றும் திருமதி தாட்சர் பொதுமக்களுக்கு உறுதியளித்துள்ளார்.

பிரிட்டனின் பிரபல பத்திரிகைகள் இந்த வேலைநிறுத்தங்கள் சம்பந்தமாக தாட்சர் அரசைக் கடுமையாக விமர்சித்துள்ளன. தாட்சர் அரசு வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவராவிடில் தொடர்ந்து பதவியிலிருக்க முடியாதென அவை கருத்து வெளியிட்டுள்ளன.

வேறுசில பத்திரிகைகள், வேலைநிறுத்தங்களினாலும், அவற்றினாலேற்பட்ட பணப் பெறுமதி வீழ்ச்சியினாலும் தாட்சர் அரசாங்கம் ஆட்டங் காணுகின்றதெனவும், பல எதிர்க்கட்சிகள் தாட்சரின் தலைமையை நீக்க முனைகின்றன என்றும் கருத்துவெளியிட்டுள்ளன.

ஆனால் அரசாங்கத்தரப்பினர் இக்கருத்துக்கள் யாவற்றையும் பூரணமாக மறுத்துள்ளனர்.

இதே வேளை பிரிட்டனின் மிக முக்கிய துறைமுகங்களான லண்டன் துறைமுகம், லிவர்பூல், இமின்காம் துறைமுகங்களில் பூரண வேலைநிறுத்தம் இடம்பெறுகின்றது. இதனால் சர்வதேச வர்த்தகத்துக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் இராணுவத்தினர் பூரண உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். இராணுவ வாகனங்களும் முக்கிய சேவைகள் ஸ்தம்பிதமடையுமிடத்து அவற்றைத்தொடர ஆயத்த நிலையில் வைக்கப்பட்டுள்ளன. (கி)

## பொற்கோயில் திருத்த வேலைகள் ஆரம்பம்!

அமிர்தசரஸ், ஜூலை 17

கடந்த ஜூன் 6-ந் திகதி இராணுவ முற்றுகைக்குள்ளான சீக்கிய 'பொற்கோயில்' திருத்த வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

சீக்கிய மதத் தலைவரான சந்தா சிங் என்பவர் சுமார் முந்நூறு சீக்கியத் தொண்டர்கள் இப்புனருத்தாரண வேலைகளை ஆரம்பித்துள்ளனர்.

இவர்கள் 'பொற்கோயில்' வளாகத்தில் தமது பணிகளைப் பிரார்த்தனைகளின் பின்னர் ஆரம்பித்தனர். அத்துடன் இப்பணிகள் நடந்துகொண்டிருந்தபோது 'குர்பாணி' என்ற சீக்கியமத பக்திக்கீதங்களும் பொற்கோயிலினுள் இசைக்கப்பட்டன.

இராணுவமுற்றுகையின் போது 'அகால்தத்' என்ற பொற்கோயில் வளாகக் கட்டிடமே பெரும் இடிபாடுகளுக்குள்ளானது. இக்கட்டிடத்தினுள்ளேயே கொல்லப்பட்ட தீவிரவாதத் தலைவர் பிந்ரன்வாலேயும், அவரது நெருங்கிய போராளிகள் சிலரும் தஞ்சம் புகுந்திருந்தனர். இக்கட்டிட இடுபாடுகளை அப்புறப்படுத்தும் பணியே முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பொற்கோயிலை நோக்கி வரவிருந்த நூறு சீக்கிய தற்கொலைப்படையினர் நேற்றுக் கைதானார்கள். ஆனால் இக்கோயிலை நோக்கி வரவிருந்த பிரதான தற்கொலைப் படையினர் தமது முயற்சியைக் கைவிட்டுள்ளனர்.

இந்தியப் பிரதமருடன் சீக்கியத் தலைவர்கள் சிலர் பொற்கோயிலிருந்து இராணுவத்தை வாபஸ் பெறச்செய்யும் பேச்சுக்களை நடத்துவதால் தாம் இதனைக் கைவிட்டுள்ளதாகவும், அப் பேச்சுக்கள் தோல்வியடைந்தால் தபதுபொக்றகோயில் பயணம் ஆரம்பமாகும்மென்றும் அவர்கள் தெரிவித்தனர்.

## மானிப்பாய் தொழில் நுட்ப பயிற்சி

[பண்டத்தரிப்பு]

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் பல இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட அன்பளிப்பு செய்யப்பட்ட மஸ்கன் சுப்பிரமணியம் ஞாபகார்த்த தொழில் நுட்பகட்டிடத்தில் பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களுக்கான திட்டப்பட வரைதல் என்னும் ஐந்துமாத பாடநெறி இம்மாதஇறுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளது இதற்கான ஒழுங்குகளை கல்லூரி அதிபர் திரு. எஸ் வி. மகேசவேலு செய்துள்ளார்.

### சான்பிரான்ஸிஸ் கோவில்

## ஜனநாயகக்கட்சி ஜனாதிபதி வேட்பாளர் தெரிவு!

### மொன்டேலுக்கு வாய்ப்புகள் அதிகம்!

சான்பிரான்ஸிஸ்கோ, ஜூலை 17.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக்கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளரைத் தெரிவுசெய்யும் மகாநாடு சான்பிரான்ஸிஸ்கோவில் ஆரம்பமாகியுள்ளது.

இவ்வார இறுதியில் ஜனநாயகக்கட்சியின் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் அறிவிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

முன்னாள் உபஜனாதிபதியும், ஜனநாயகக்கட்சி வேட்பாளருக்கான பூர்வாங்கத் தேர்தல்களில் பெருமளவு வெற்றியீட்டியவருமான திரு வோல்ட்டர் மொன்டேலே பெரும்பாலும் தெரிவு செய்யப்படுவார் என்று எதிர் பார்க்கப்படுகின்றது. ஆயினும். அப்பூர்வாங்க தேர்தல்களில் இரண்டாமிடம் பெற்ற திரு. ஹார்ட், மூன்றுமிடம்பெற்ற வண. ஜெஸ்ஜக்ஸன் ஆகியோரும் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் தெரிவில் ஆர்வங்காட்டுகின்றனர். இவர்கள் தமது ஆதரவாளர்களுக்குத் தொடர்ந்து உற்சாகமூட்டிவருகின்றனர்.

திரு. வோல்ட்டர் மொன்டேல் தமது துணைப் போட்டியாளராக திருமதி ஜெரால்டின்பெரர் என்ற பெண்ணைத் தெரிவுசெய்துள்ளார், ஜனநாயகக்கட்சி வேட்பாளராக திரு.மொன்டேல் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் உப ஜனாதிபதி போட்டிக்கு திருமதி ஜெரால்டின் பெரரே நியமிக்கப்படுவார்.

சான்பிரான்ஸிஸ்க்கோ மகாநாட்டில் திரு. மொன்டேலுக்கு ஆதரவாகவும், எதிர்வரும் நவம்பரில் திரு. மொன்டேலே ஜனாதிபதியாகத் தெவு செய்யப்படவேண்டுமெனவும் அமெரிக்க நகரங்களில் மொன்ப்டல் ஆதரவாளர்கள் கோஷமிடத் தொடங்கிவிட்டனர். (கி)


**பணம் வேண்டுமா?**

உங்கள் தங்க நகைகளுக்கும் காணிகளுக்கும் பணம் தேவையா??

**த பினான்ஸ் கொம்பனி லிமிட்டட்**

249, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23680


## ✯ஒலிம்பிக்✯

### ✯ பத்துத்தங்கப்பதக்கங்கள்

எதிர்வரும் லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் சீனா பத்துத் தங்கபதக்கங்களைத் தான் கைப்பற்றும் என்று தெரிவித்துள்ளது. இப்பத்தில் அரைவாசி 'ஜிம்னாஸ்ட்டிக்' போட்டிகளிலேயே பெறப்படுமாம்: இப்போட்டிகளில் உலக சாம்பியன்களான சோவியத் யூனியனே சீனாவுக்கெதிரான மிக முக்கிய எதிரணியாகும். எனவே சோவியத் ஒலிம்பிக்கைப் பகிஷ்கரிப்பதால் ஜிம்னாஸ்டிக் போட்டிகளில் சீனாவுக்கே வாய்ப்புகள் அதிகம் என்று கூறப்பட்டது. சோவியத் பங்குபற்றாததால் அமெரிக்க, ஜப்பான், ருமேனிய அணிகளுடனேயே சீனாவுக்குப் போட்டியிருக்குமென்று தெரிவிக்கப்பட்டது. சீனா 225 பேரடங்கிய ஒலிம்பிக் அணியை லாஸ் ஏசல்ஸுக்கு அனுப்பியுள்ளது. இவ்வணி 16 போட்டிகளில் கலந்துகொள்ளும்.

### முதலாவது விளையாட்டு வீரர்

சூசியான் கியான் என்ற தென் கொரியாவின் முப்பாய்ச்சல் போட்டி வீரர், லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்போட்டிக்கு முதலில் வந்த வீரராகக் கௌரவிக்கப்பட்டார். கடந்த சனிக்கிழமை லாஸ் ஏஞ்சல்ஸில் இதுகுறித்து நடாத்தப்பட்ட வைபவமொன்றில் இவரை லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கமிட்டி கௌரவித்தது.

இவரே ஒலிம்பிக் வீரர்கள் தங்கும் லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் கிராமத்தினுள் நுழையும் முதலாவது வீரருமானார்.

### 10 பேருக்கு ஒரு குளியலறை

அமெரிக்க விளையாட்டு வீரர்கள் சிலர் ஒலிம்பிக் கிராம வசதிகள் குறித்து அதிருப்தி தெரிவித்துள்ளனர். 4 பேருக்கு ஒரு அறையென்ற ரீதியில் விளையாட்டு வீரர்கள் தங்க வசதி செய்யப்பட்டுள்ளதாம். அத்துடன் பத்துப்பேரின் உபயோகத்துக்கு ஒரு குளியலறை மட்டுமே வழங்கப்பட்டுள்ளதாம். இது பெரும் நெருக்கடியைக் கொடுக்கும் என்று அமெரிக்க வீரர்கள் கூறியுள்ளர்.

### 141 நாடுகள் 8000 வீரர்கள்

சோவியத் யூனியனும், அதன் நேசநாடுகளும் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளபோதிலும் 141 நாடுகளும் அவற்றிலிருந்து 8000 விளையாட்டு வீரர்களும் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்வார்களென்று அறிவிக்கப்பட்டது. இந்த எண்ணிக்கைகள் கடந்த ஒலிம்பிக் போட்டிகளைவிட அதிகமானவையாகும். (கி)

## ✯செய்திகள்✯

## கொலைகள் பற்றி ஒருபுள்ளிவிபரம்

(கொழும்பு)

கடந்த ஒன்பது ஆண்டுகளில் நாடு முழுவதிலும் 1977ம் ஆண்டிலும் 83ம் ஆண்டிலுமே ஆகக்கூடுதலானோர் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

ஆகக்கூடுதலாக கடந்த ஆண்டு 1434 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர், 77ம் ஆண்டில் 1261 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

83ம் ஆண்டு ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் இடம்பெற்ற இனக்கலவரங்களின் போது கொல்லப்பட்டோர் தொகை இதில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

இப்புள்ளி விபரத்தை குற்றவியல் பகுதிக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் திரு டிரல் குணதிலகா நேற்று முன்தினம் இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் தெரிவித்தார்.

'தொலைக் காட்சியும் வன்முறையும்பற்றியஇரண்டுநாள் கருத்தரங்கொன்று இலங்கை மன்றக் கல்லூரியினது ரூபவாகினி கூட்டுத்தாபனத்தினதும் ஆதரவில் நடைபெற்றது.

75ம் ஆண்டு முதல் இவ்வாண்டு ஏப்ரல் மாதம் வரை நாட்டில் இடப்பெற்ற குற்றச் செயல் பற்றி விபரித்த திரு. குணதிலகா, கடந்த ஆண்டு இடம்பெற குற்றச் செயல்களிலும் இவ்வாண்டு முதல் 4 மாதங்களில் இடம்பெற்ற குற்றச் செயல்களிலும் 20 வீதமானவை வடக்கு கிழக்கு பயங்கரவாதச் செயல்கள் என்றும் கூறினார். அவர் மேலும் கூறியதாவது:

77ம் ஆண்டிலும் 83ம் ஆண்டிலுமே ஆகக்கூடுதலான குற்றச் செயல்கள் இடம்பெற்றுள்ளன.

77ம் ஆண்டு...

1261 கொலைகள் 529 5ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட களவுகள், 119 10ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட களவுகள், 601 5ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட ஆயுதமுனைக் கொள்ளை, 32 பெரு வீதி வழிப்பறி, 22 வங்கிக்கொள்ளை. மொத்தம் 2574 குற்றச் செயல்கள் இடம் பெற்றுள்ளன.

83ம் ஆண்டு...

1434 கொலைகள், 765 5ஆயிரம் ரூபபவுக்கு மேற்பட்ட களவுகள், 281 10 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட களவுகள். 366 5ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட ஆயுதமுனைக் கொள்ளை, 224 பெரு வீதி வழிப்பறி, 07 வங்கிக் கொள்ளை.

மொத்தம் 3077 குற்றச் செயல்கள்.

84 ஏப்ரல் வரை (4 மாதங்கள் மட்டும்)

286 கொலைகள் ,232 5ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட களவுகள்,92. 10 ஆயிரம் ரூபவுக்கு மேற்பட்ட களவுகள்

(7ம் பக்கம் பார்க்க)

**மணிவாக்கு**

காமத்தைப்போல் கொடியதீ வேறெதுவும் இல்லை.
—தர்மபதம்

# நமது நோக்கு

## மருத்துவக் கல்வி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா இம்முறை எவ்வித ஆடம்பரமுமின்றி நடந்து முடிந்ததை ஒரு குறிப்பிடக்கூடிய செய்தியாகப் பிரசுரித்திருந்தோம்.

அதில் எவ்விதத் தவறுமில்லை. ஆனால் அதொரு சாதாரண வைபவமென்று கருதுவது தவறு. வாழ்க்கையில் அலங்காரத்துக்கு இடமுண்டு; தக்க இடத்தில் தக்க தருணத்தில், தேவைப்படுமளவிற்கு அலங்காரம் இடம்பெறுமானால் வைபவத்தில் அழகுபொலியுமென்பதில் ஐயமில்லை.

யாழ்ப்பாண வரலாற்றில் பல்கலைக்கழக மாணவர்கள் முதன்முதல் இங்கு மருத்துவப்பட்டம் பெற்றது அன்றைய தினத்தின் ஒப்பற்ற அழகென்பதை அங்கு பிரசன்னமானவர்கள் கவனித்திருப்பார்கள்.

பட்டம் பெற்றதும் வேந்தர் பேராசிரியர் த. நடராசாவிடம் என்பது யாழ்ப்பாண வரலாற்றின் பழமையும் புதுமையும் சந்திக்குமிடமென்பதை நாம் விளக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

இலங்கைக்கு ஒரு பல்கலைக்கழகம் வேண்டுமென்பது கிளர்ச்சி செய்த பெரியோரில் முதலிடம் பெறுகிறவர் சேர். பொன்னம்பலம் அருணசலம்: யாழ்ப்பாணத்துககு ஒரு பல்கலைக்கழகம் அமைக்க வேண்டிய காலத்தை முன்னுணர்வுடன் மதிப்பிட்டு பரமேஸ்வர கல்லூரியையும் அதன் விசாலமான காணியையும் நிர்மாணித்தவர் அவருடைய சகோதரர் சேர். பொன்னம்பலம் இராமநாதன்.

சேர். பொன்னம்பலம் அருணசலத்தின் பேரனை வேந்தர் த. நடராசா தனிப்பட்ட முறையில் இப்பெரும் பதவிக்குஉரித்தானவர் என்றாலும் தமது பெருமைக்குரிய இருபேரன்மாரின் தலைப்பாகையுடனும் கறுப்புநிறக் கோட்டும் கால் சட்டையுடனும் இவ் வைபவத்தை அலங்கரித்ததால் பொன்னின் குடத்துக்குப் பொட்டுத் தேவையில்லை என்ற உணர்வு நிலவியது.

அது அவ்வாருக மருத்துவப் பட்டம்பெற்ற ஐம்பது இளம் டாக்டர்கள் வரலாற்று முக்கியத்துவம்பெற்ற பேர்வழிகள். யாழ்ப்பாண மருத்துவ சேவையில் ஒரு புதிய திருப்பம் காண இந்தக் கன்னிப்படை கணிசமான அளவிற்கு உதவுமா? இவர்களைப் பின்பற்றிவரவிருக்கும் மருத்துவ பட்டதாரிகள் இப்பகுதியின் நோயற்ற வாழ்வுக்கு எவ்வாறு உதவலாம்''.

இவ்வித வினக்கள் சிந்தனைக்குரியவை. யாழ்ப்பாணத்தின் மருத்துவக் கல்லூரிக்குப் பொறுப்பான வைத்திய போதனசிரியர்கள், பேராசிரியர்கள் மட்டுமல்ல, மருத்துவபீடம், பல்கலைக்கழகப் படிப்புக்குப் பொறுப்பான ஆசிரிய குழாம், பொதுமக்கள்கூட இவற்றை அலசி பயனுள்ள கருத்துக்களை வழங்கவேண்டுமென்பது எமது பேரவா.

மருத்துவக் கல்வியையும் டாக்டரின் உன்னத தொழிலையும் பீடித்திருக்கும் பெரும் குறைகளிலிருந்து இன்று வெளியாகும் பட்டதாரிகள் விடுபடவேண்டுமென்று நாம் பிரார்த்திக்கின்ருேம்.

முதலாவதாக, இந்தப் பகுதி மக்களுக்குத் தங்கள் சேவை கிட்டுமளவிற்கு அவர்கள் பணிபுரிய முன்வரவேண்டும்; அரசாங்க சேவையென்ருலும் தமிழ்ப் பகுதிகளுக்கு இங்கு உருவாக்கப்படும் பட்டதாரிகள் மிகத்தேவையானவர்கள்.

இரண்டாவதாக, இவர்களின் பட்டம், படிப்புப் பயிற்சி, எல்லாவகையிலும் எங்கள் மக்களின் வாழ்க்கை முறைக்கு மிகப்பொருத்தமாயிருக்கா; அந்தக் குறையை ஆரம்பத்தில் உணர்ந்து பட்டப்பின்படிப்பிலும், தொழிற்பயிற்சியிலும் வேண்டப்படும் திருத்தங்களை தங்கள் சுயமுயற்சியாலும் அனுபவத்தாலும் பெறவேண்டும்

விருத்தியடைந்த பிரிட்டன், அமெரிக்கா அல்லது ஜெர்மனியைப்போலல்லாமல், பின்தங்கிய ஒரு நாட்டின் பல பாகங்களில் வறுமையிலும் அறியாமையிலும் வாடி வாழும் மக்களுக்குச் சேவைபுரியவேண்டுமென்பதை ஒரு சவாலாகக்கொள்ளவேண்டும்.

அது ஒரு கடினமான பணி. எங்கள் சூழலில் பெருகும் பல பிணிகள் தொற்றுநோய்கள், அசுத்த சூழல், அழுக்கு, தொற்றுநோய் பரவக்கூடிய நீர், உணவுபோன்ற பொருள்களால் பரவுகின்றன. ஆஸ்பத்திரியில் கடமைபுரியும் போது இதன் அபாய விளைவுகளை இளம் டாக்டர்கள் நேரில் காணமுடியும்.

சுகாதார சூழ்நிலையைச் சீர்திருத்தும் பொறுப்பு டாக்டரைச் சார்ந்ததல்ல; அது ஆட்சியின் நிர்வாகத்தையும் மக்களின் அறிவாற்றலையும் பொறுத்தது. ஆனுல் இன்றைய டாக்டர்கள், கடந்தகாலம்போல் நோயாளியின் சமுதாய நோக்கிலிருந்து ஒதுங்கி வாழ்பவராளுல் அவருடைய வைத்தியம் அதிகப்பலனளிக்காது.

எனவே மருத்துவக்கல்வியில் மாற்றம் அவசியம் தேவை. உடனடியாகச் செய்தல், அல்லது அதன் விஞ்ஞான அடிப்படைக்கு பங்கம் விளைவித்தல் இன்றைய தரத்தைக் குறைத்துவிடும். செவ்வனே அமைக்கப்பட்ட பாடத்திட்டமும், போதனமுறையும், பரீட்சையும், விருத்தியடையும் எங்கள் சமூகத்துக்குப் பொருத்தமான முறையில் மாற்றம் காண்பது அவசியமென்பதை மருத்துவக் கல்விக்குப் பொறுப்பானவர்கள் உணரவேண்டும்.

### நீலாயதாட்சி அம்பாள் உற்சவம்

(யழ்ாப்பாணம்)

திருநெல்வேலி சிவன் கோயில் நீலாயதாட்சி அம்பாள் வருடாந்த உற்சவம் எதிர்

[8-ம் பக்கம் பார்க்க]

# பிரார்த்தனையே இன்றையத்தேவை!

ஆடிக்கலவரத்தின் ஆண்டு நிறைவு நெருங்குகிறது.

''இந்த வாரமும் அடுத்த வாரமும் நாட்டு மக்களின் அமைதியானவாழ்வுக்கு சவால் விடும் நாட்களாகும். எனவே இதை அறிந்து நாம் உஷார் அடைந்துள்ளோம். பொலிசாரும் பாதுகாப்புப் படையினரும் உஷார்நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். கலவரத்தைத் தூண்டும் முயற்சிகள் எந்தக் கோணத்திலிருந்து வந்தாலும் அதனைமுறியடித்து சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளன'' என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி தெரிவித்திருக்கிறூர்.

ஆடிக்கலவரத்தின் நினைவையொட்டி இம்மாதம் 25ஆம், 26ஆம் தேதிகளில் ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு கோரும் சுவரொட்டிகள் வடக்கிலும் கிழக்கிலும் காணப்படுகின்றன.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வீதிகளில் தடைபோட்டுச் சோதனை நடத்துகிறது அதிரடிப்படை!

தினமும் பல இளைஞர்கள் விசாரணைக்காகக் கூட்டிச்செல்லப்படுகின்றனர்.

25ஆம் தேதி சத்தியாக்கிரகம் செய்வது சம்பந்தமாக தமிழர் விடுதலைக் கூட்டணி ஆலோசித்து வருவதாகவும் இம்மாதம் 21ஆம் தேதி கூடும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபை முடிவு செய்யுமென்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சத்தியாக்கிரகமா உண்ணுவிரதமா என்பது பற்றிக் கூட்டணியின் பொதுச்சபை முடிவு செய்யவிருக்கிறதாம்.

இன்றுள்ள நிலையில் பொதுமக்கள் பங்குகொள்ளும் முறையில் சத்தியாக்கிரகமோ உண்ணுவிரதமோ பெரிய அளவில் செய்வது நல்லதா?

நாடெங்கிலும் வன்செயல்கள் அதிகரித்துள்ளன.

சத்தியாக்கிரகமும் உண்ணுவிரதமும் சக்திவாய்ந்த அகிம்சை ஆயுதங்கள்.

இந்த இரண்டு ஆயுதங்களையும் உபயோகித்துதான் இந்திய தேசத்தின் ஒற்றுமையைஏற்படுத்தி தியாகத்துக்கு மக்களைத்தயாராக்கி நாட்டுக்கு விடுதலையை தேடிக் கொடுத்தார். காந்தி மகாத்மா.

ஒரு தடவை சத்தியாக்கிரகம் ஆரம்பித்த மகாத்மா அது பெரும் வன்செயல்களுக்கு வழிவகுத்து நாடுமுழுவதும் இரத்தக் களரியை ஏற்படுத்தியபோது மனம் வருந்தி ''இமாலயத்தவறு செய்துவிட்டேன்.'' என்று கூறி சத்தியாக்கிரகத்தை உடன் நிறுத்திக் கொண்டார். சத்தியாக்கிரகத்திற்கு மக்கள் இன்றும் சரியான பக்குவ நிலைக்கு வரவில்லை என்பதை அறிந்தே மகாத்மா தனது தவறை உணர்ந்து அதை நிறுத்திக் கொண்டார்.

நாகரிகமுள்ள பிரிட்டிஷ் சத்தியாக்கிரகத்தை உணர்ந்தனர், மதிப்புக் கொடுத்தனர்.

இங்கு 1956ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஐந்தாம் தேதி சிங்களம் மட்டும் சட்ட மசோதா பாராளுமன்றத்தில்

**— எஸ். எம். ஜி. —**

கொண்டுவரப்பட்டபோது அதை எதிர்த்து தமிழரசுக் கட்சித் தலைவர்களும் தோண்டர்களும் காலிமுகத்திடலில் பாராளுமன்றத்துக்கு எதிரே உண்ணுவிரதம் இருந்தனர்.

காவல்துறையினர் பார்த்துக்கொண்டிருக்க குண்டர்கள் சத்தியாக்கிரகிகள் மீது தாக்குதல் நடத்திப் படுகாயம் விளைவித்தனர். இங்கினியாகலை அம்பாறையிலும் நாட்டின் வேறுபல பகுதிகளிலும் இனக்கலவரம் தோன்றியது.

1961-ஆம் ஆண்டு வடக்கு கிழக்குப் பகுதிகளில் தமிழரசுக் கட்சியினர், கச்சேரி வாசல்களிலும் இதர அரச அலுவலகங்கள்முன்னுலும் சத்தியாக்கிரகம் செய்து அரசயந்திரத்தை சில மாதங்கள் இயங்காமல் செய்தனர்.

ஆனுலும் தமிழரசுக் கட்சியின் நோக்கம் நிறைவேறுவதற்குப் பதிலாக மக்கள் பெருமளவில் பங்கு கொண்டு எழுச்சி ஏற்படுத்திய சத்தியாக்கிரக இயக்கம் படைகளைக்கொண்டு முறியடிக்கப்பட்டது!

ஆனுலும் ஈழத் தமிழரின் நிலையை உலகுக்கு எடுத்துக் காட்டுவதற்கு இந்த சத்தியாக்கிரக இயக்கங்கள் ஓரளவு உதவின.

இன்று ஈழத்தமிழரின் நிலை உலகப் பிரச்னைகளில் ஒன்ருகிவிட்டது.!

சத்தியாக்கிரகம் நடத்தித்தான் உலகுக்கு உணர்த்த வேண்டும் என்ற நிலை இன்று இல்லை

இன்றுள்ள நிலையில் பொது மக்கள் பங்குகொள்ளக் கூடிய அளவில் சத்தியாக்கிரக இயக்கமோ உண்ணுவிரத இயக்கமோ ஆரம்பித்தால் அமையாகவே நடைபெறுமென்று உறுதியளிக்கமுடியுமா? இதர பகுதிகளில் எதிரொலிச் சம்பவங்கள் நடைபெறமாட்டாதெனச் சொல்ல முடியுமா?

1961-ஆம் ஆண்டு கச்சேரி வாசல் சத்தியாக்கிரக சமயத்தில் ''சண்டியாக்கிரகமும்'' அங்கு சிலதினங்கள் நடைபெற்றதை மறந்துவிடக் கூடாது.

இங்கு இன்று சத்தியாக்கிரகம் நடைபெற்ருல் வன்செயல்கள் யாரால் எப்படி ஆரம்பிக்கப்படும் என்று சொல்லமுடியாது. ஆனுலும் பழியைப் போடுவதற்கு ஆட்களா இல்லை!

இன்றுள்ள நிலையில் ஆடிக் கலவரத்தில் உயிரிழந்தவர்களின் ஆத்மா சாந்தியடையவும் உடமை இழந்தவர்களுக்கு அனுதாபத்தைத் தெரிவிக்கவும் பெரும்பான்மைச் சமூகத்தவர்களின் மனமாற்றத்திற்கு வேண்டுதல் செய்தும் தமிழ்மக்கள் ஓராண்டு நினைவு தினத்தில் அவரவர் இடத்தில் இருந்தபடியே பிரார்த்தனை செய்வதுதான் அவசியமாகும்.

## பத்திரிகைகள் தீயிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து வெளிவரும் இரு தினசரிப் பத்திரிகைகள் நேற்று முன்தினம் யாழ். நகரில் இருஇடங்களில் வைத்து 4 இளைஞர்களினுல் தீயிட்டு கொளுத்தப்பட்டன.

வழக்கம்போல், பஸ்ஸில் வந்த பத்திரிகைக் கட்டுக்களை இந்த இளைஞர்கள் எடுத்து அவ்விடத்திலேயே வைத்து தீமூட்டியதாகக் கூறப்படுகிறது.

இதன்பின் மற்ருெரு இடத்திலும், இப்பத்திரிகைகள் தீவைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

தமிழ்ப் பத்திரிகை ஒன்றும், ஆங்கிலப் பத்திரிகையொன்றுமே தீயிடப்பட்டது.

இருதினங்களுக்குமுன் அப்பத்திரிகைகளில் வெளியான செய்தியைக் கண்டித்து, நகரில் பல இடங்களில் சுவரொட்டிகளும் காணப்பட்டன. (க.

## வேலைவங்கியில்பதிவுசெய்தவர்களுக்கு 'நியமனம் வழங்குக'

**யாழ். மாவட்ட சமூக அபிவிருத்திக்கழகம் கோரிக்கை**

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திலுள்ள அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள்,, சபைகள் என்பவற்றில் சகல தரத்திலும் வெற்றிடங்கள் இருப்பதுடன் வேலைவங்கியில் பதிவு செய்த பலருக்கும் நியமனங்கள் இன்னும் வழங்கப்படாதிருக்கிறது என்றும் எனவே 1982இல் வேலைவங்கியில் பதிவு செய்தவர்களைத் தெரிவுசெய்து நியமனம் வழங்க உடன் நடவடிக்கை எடுக்குமாறும் யாழ் மாவட்ட சமூக அபிவிருத்திக் கழகம் யாழ் அரசாங்க அதிபருக்கும் யாழ். மாவட்ட அமைச்சருக்கும் அனுப்பியுள்ள கடிதத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேலும் அக்கடிதத்தில் '1982 இல் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் ரீதியான வேலை வங்கிக்கான பதிவுகள் செய்யப்பட்டன. ஆனுல் இதுவரை ஒரு சில நியமனங்களே வேலை வங்கி மூலம் வழங்கப்பட்டுள்ளன. அதன் பின்பு வேலைவங்கிப் பதிவுகள் எதுவும் நடைபெறவில்லை. வேலை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்வதுடன், பின்தங்கிய சமூகத்தவர்களுக்கும் இவ்வேலை வாய்ப்புகளில் விகிதாசார முன்னுரிமை வழங்குமாறும் கேட்டுக் கொள்கின்ருேம்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**புனித அந்தோனியார் சிலை திறப்பு விழா:**

## தமிழில் இறைஞ்சுவதை இறைவன் விரும்புவான்

[யாழ்ப்பாணம்]

''தமிழ்மொழி இரக்கத்தின் மொழி; பக்தியின் மொழி: என்றும் தமிழில் இறைஞ்சுவதை இறைவன் மிகவும் விரும்பி அருள் தருவான் என்பதாகவும் பெரியோர்கள் உறுதி கூறியுள்ளார்கள். இவ்வழியில் புனித அந்தோனியாரை வழிபடுபவர்கள் அருள்கொடைகளை ஏராளமாக பெற்று மேன்மையடைவார்கள்.''

இவ்வாறு யாழ். மத்தியூஸ் வீதியில் புனித அந்தோனியார் சிலை திறப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்புரை வழங்குகையில் திரு. ஐயா. ஜோசப் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் 'சமயவழி ஒழுகுதல்' மேன்மையுடையது. நல்வாழ்வையும் நல்லெழுக்கத்தையும் ஒருங்கிணைத்து மனித வாழ்வைப் புனிதப்படுத்தும் கைங்கரியத்தையே சமயங்கள் பாதிக்கின்றன. ''இந்தப் பதையைத் தெரிந்தெடுத்ததனல்த்தான் அந்தோனியார் புனிதரானுர்.'' என்று குறிப்பிட்டார்.

மத்தியூஸ் வீதி மக்களின் ஒத்துழைப்போடும் இளைஞரது அயராமுயற்சியினுலும் மிகவும் சிறப்பான முறையில் மேற்படி கிளை திறப்புவிழா நடைபெற்றது.

மேற்படி நிகழ்சியில் வண. ஹில்லறி ஜெபநேசன், ஆசிரியர் மோ. தார்சியஸ், திரு எஸ். ஆசிர்வாதம் ஆகியோரும் கருத்துரை வழங்கினுர்கள்.

[மா]

# "சில சமயங்களில் பத்திரிகைகள் மௌனம் சாதிப்பதும் அவசியம்"

## ஓய்வுபெறும் பத்திரிகாசிரியர் கருத்து

(கொழும்பு)

சில சமயங்களில் மௌனத்தைக் கடைப்பிடிக்க வேண்டியதும் பத்திரிகைகளின் தலையாய கடமை இந்த நாட்டின் சில பத்திரிகைகள் மௌனமாக இருந்திருந்தால் சில கலவரங்களைத் தவிர்த்திருக்கலாம்.

இவ்வாறு வீரகேசரி பத்திரிகை முன்னாள் பதில் ஆசிரியர் திரு. டேவிட் ராஜு கொழும்பில் நடைபெற்ற பிரிவுபசார வைபவத்தில் பேசுகையில் கூறினார்.

கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசரும் சட்டப் பேராசிரியருமான கலாநிதி எச். டபிள்யு. தம்பையா தலைமையில் நடைபெற்ற இப் பிரிவுபசார விழாவில் தமக்களிக்கப்பட்ட பாராட்டுக்களுக்குப் பதில் அளித்துப் பேசுகையில் திரு. டேவிட் ராஜு மேலும் கூறியதாவது:

உண்மையான செய்திகளைப் பிரசுரித்தல் பொதுநலனுக்கும் பாதிப்பு ஏற்படாமல் மக்களுக்குப் பதில் அளிக்கக்கூடிய விதத்தில் செய்திகளைப் பிரசுரித்தல் இந்த இரண்டுகோட்பாடுகளுமே பத்திரிகைத்துறையில் எனக்கு வழிகாட்டியாக இருந்தன,

தமிழ்இனம் இன்று சோதனை மிகுந்த காலகட்டத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறது. இந் நிலையில் அன்றும் இன்றும் தமிழ் இனத்திற்குப் பெருமை தேடித்தந்துள்ள கல்வியை எத்துணை இடர்வரினும் நாம் புறக்கணிக்கக் கூடாது. இந்த வேண்டுகோளை பத்திரிகையாளர்கள் ஊடாக பெற்றோருக்கு விடுக்கிறேன்.

தினகரன் ஆசிரியர் திரு. ஆர். சிவகுருநாதன் பேசுகையில் கூறியதாவது:-

தமிழ் இனத்தின் வளர்ச்சிக்காகவும் மேம்பாட்டிற்காகவும் ஈடேற்றத்திற்காகவும் பணியாற்றிவந்த திரு. டேவிட் ராஜின் அனுபவம் வீணாகக் கூடாது அவர் பத்திரிகைத் துறையிலிருந்து ஓய்வுபெறக் கூடாது.

வீரகேசரி மூலம் பல எழுத்தாளர்களை, நூலாசிரியர்களை, பத்திரிகையாளர்களை உருவாக்கிய திரு.டேவிட்ராஜு அதன் மூலம் எமது சமூக பொருளாதார வளர்ச்சிக்கும் பெரும் சேவையாற்றினார்.

வீரகேசரி ஆசிரியர் திரு, ஆ. சிவநேசச்செல்வன் பேசும் போது கூறியதாவது:-

இன்று சுதந்திரமற்ற நிலையில் பத்திரிகைச் சுதந்திரமும் பறிபோகும் ஆபத்து எம்மை எதிர்நோக்கிஉள்ளது.

இந்த நாட்டில் தமிழ் பத்திரிகைத்துறைக்கு என்றுமே ஒரு சாபக்கேடு நிலவிவருகிறது. பல நெருக்கடிகளுக்கு மத்தியிலே தமிழ்ப்பத்திரிகைத் துறையில்சேவையாற்ற வேண்டிய நிலை.

இந்நிலையில் 30 ஆண்டுகள் சேவையாற்றிய திரு. டேவிட் ராஜு பாராட்டுக்குரியவர்.

தினகரன் பத்திரிகையைச் சேர்ந்த ஜனாப் என். எம். அமீன் பேசுகையில் கூறியதாவது:-

இளம் பத்திரிகையாளர்களின் வளர்ச்சிக்கும் பத்திரிகைத்துறைக்கும் தம்மையே அர்ப்பணித்ததுடன் முன்னோடியாகவும் திகழ்ந்த திரு. டேவிட்ராஜின் சேவை இன்னமும் முற்றுப்பெற்றுவிடவில்லை பத்திரிகைத் துறைக்கு முக்கியமாக தமிழ் பத்திரிகைத்துறைக்கு அவர் ஆற்றவேண்டிய சேவை இன்னமும் இருக்கிறது.

வீரகேசரி பத்திரிகையைச் சேர்ந்த திரு அன்ரன் டேவிட் கூறியதாவது:

உலகநாடுகளில் பத்திரிகையாளர்கள் உயர்ந்த நிலையில் இருக்கின்ற அதேவேளையில் நம்நாட்டுப் பத்திரிகையாளர்கள் மிகவும் வேதனையான சூழ்நிலையில் வாழ்கிறார்கள். அதுவும் தமிழ்ப்பத்திரிகையாளர்களின் நிலையோ, பரிதாபம்.

பத்திரிகையாளர்கள் எந்நேரமும் நாட்டையும் மக்களையும் இனத்தையும் பற்றியுமே சிந்திக்கிறார்கள். நித்திரைவிட்டெழுகின்ற நேரம் முதல் மீண்டும் நித்திரைக்குப் போகும்வரை அவர்களுக்கு அதே சிந்தனை தான்.

இப்போது புனைபெயரில் எழுதுபவர்களுக்கு ஆபத்து வந்துவிட்டது புனைபெயரில் எழுதுவதற்குத் தடை வந்ததும் சகல விடயங்களையும் மக்களுக்கு வழங்க முடியாத நிலை ஏற்படும்.

வர்த்தகர் ஜனாப். எம். எஸ். ஷாஜகான் கூறியதாவது:

மருத்துவம்' கலை,விஞ்ஞானம் போன்ற துறைகளைப் போன்ற பத்திரிகைத் துறையும் உயர்ந்த சிறந்த துறை. ஆனால் இத்துறைக்கு இலங்கையில் மதிப்பளிக்கப்படுவதில்லை. திரு டேவிட் ராஜு முஸ்லிம்மக்களுக்கு ஆற்றிய சேவையையும் மறக்க முடியாது.

சில்லையூர்செல்வராஜன் பேசுகையில்: நிருபராக உதவியாசிரியராக, செய்தியாசிரியராக இருந்து பதில் ஆசிரியராக உயர்ந்த டேவிட் ராஜுவினால் வீரகேசரி பத்திரிகைத் துறை வரலாற்றில் முக்கிய இடத்தைப்பெற்றது. துடிப்புள்ள பத்திரிகையாளனான அவரது எழுத்தாற்றலுக்கு முற்றுப் புள்ளிவைக்கக் கூடாது என்றார்

திருவி.எஸ் ராஜா பேசுகையில், இலங்கைப் பத்திரிகைகளின் வரலாற்றில் வீரகேசரியும் இடம்பெறும். மேலும் திரு டேவிட் ராஜுவின் பெயரும் அவ் வரலாற்றில் இடம் பெறும் என்றார்.

திருமதி அன்னலட்சுமி இராசதுரை திருவாளர்கள் சுபாஷ்சந்திரபோஸ், கனகரத்தினம், கே.எஸ்.சிவகுமாரன், ஜனாப்.ஏ.எச்.எம் அஷ்லர் ஆகியோரும் உரையாற்றினர்.

வர்த்தகர் பீ.வி.ரி.வி தெய்வநாயகம்பிள்ளை, பீ டேவிட்ராஜுக்கு பொன்னாடை போர்திக் கௌரவித்தார்.

### இவர்களுக்கு கட்டுப்பாடு

(பச்சிலைப்பள்ளி)

விசேட சேவை உத்யோகத்தர்கள், கூட்டுறவுச்சங்கங்களில் பதவி வகிக்கமுடியாது.

திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சு அனுப்பிவைத்துள்ள சுற்றுநிருபமொன்றில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

இச்சுற்றுநிருபம் உதவி அரசாங்க அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

### கிளைக் கூட்டம்

[மானிப்பாய்]

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க மானிப்பாய்க் கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் வரும் சனிக்கிழமை காலை யாழ்.இராமநாதன் கல்லூரி மண்டபத்தில்திரு. த. நடராசா தலைமையில் நடைபெற விருக்கிறது.

பிரதம விருந்தினராக மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு ச. தனஞ்செயன் கலந்து கொள்வார்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம்,இ த ஆ ச.யாழ்.மாவட்ட தலைவர் திரு த.காசிநாதன் ஆகியோரும் உரைநிகழ்த்த இருக்கின்றன.

### மகளிர் தினவிழா

[வவனியா]

வவனியாவில் மகளிர் தின விழா நயினமடு என்ற இடத்தில் கொண்டாடப்படவுள்ளது.

எதிர்வரும் 22ம் திகதி இவ் விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அன்றைய தினம் விழாவினையொட்டி விளையாட்டுவிழாவும, கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும்.

மகளிர்தின விழாவில் கலந்துகொள்வதற்காக இலங்கை குடும்பத்திட்ட சங்க தகவற் பிரிவு உதவிப் பணிப்பாளர் திருமதி யோகா பாலச்சந்திரன் இங்கு வரவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை குடும்பத்திட்ட சங்கத்தின் அனுசரணையுடன் வவனியா மாவட்ட குடும்ப செயற்குழு இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது என கச்சேரி உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### ஊர்வாய்

நக்கீரர்

சொற்சாதுரியம் என்பது ஒரு தனிக்கலை அரசியல் வாதிகளில் மட்டுமல்ல பொது மக்களிற்கூட பலர் சரியான நேரத்தில் பொருத்தமான பதிலைச் சுடச்சுடக் கொடுப்பதில் திறமை மிகுந்தவர்கள் இருக்கிறார்கள். அந்தநேரத்தில் நான் அவருக்கு இப்படிச் சொல்லியிருக்க வேண்டும் என்று காலதாமதத்துடன் ஞானம் பிறந்து எம்மிற்சிலர் வருத்தப்படுவதுமுண்டு.

இந்த நிகழ்ச்சி சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்நடைபெற்றது அப்போது கொழும்பு மருத்துவக் கல்லூரியிலே பேராசிரியர் ஆ. சின்னத்தம்பி (பெண்கள் வைத்தியம் மக்கட்பேறு நிபுணர்) வகுப்பு நடாத்திக் கொண்டிருந்தார். அந்த வகுப்பிலே, இன்று யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவப் பகுதியின் பீடாதிபதியாக இருக்கும் 'நந்தி' எனப்படும் பேராசிரியர் சிவஞானசுந்தரமும் கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தில் உயர் பதவிவகித்து ஓய்வு பெற்று தற்போது யாழ் மருத்துவபீடத்தில் பகுதிநேரப் பேராசிரியராகக் கடமைபுரியும் டொக்டர் வேலாயுதபிள்ளையும் இருந்தார்கள். மிகுதியை நந்தி அவர்களே கூறுகிறார்:

''ஒரு பெண் நோயாளி முன் எம்மில் சுமார் பத்துப் பேர்கூட்டமாக நிற்க பேராசிரியர் சின்னத்தம்பி நோயாளியின் வருத்தத்தைப்பற்றி விளங்கிக் கொண்டிருந்தார். நேரம் போய்க்கொண்டிருந்தது. நண்பகல் கழிந்துவிட்டது. வேலாயுதபிள்ளை பேராசிரியரைப் பார்த்து சேர், பசிக்கிறது; கன்டீனுக்குப் போயிற்று வரட்டா? என்று கேட்டார். பேராசிரியர் கண்டிப்பான பேர்வழி. மாணவனின் குறுக்கீடு அவருக்குப் பிடிக்கவில்லை. அவர் வேலாயுதபிள்ளையைப் பார்த்து ''ஐசே, வேலாயுதபிள்ளை ஔவையார் பாடிய இந்தப் பாட்டைக்கேளும், 'மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண் துஞ்சார்,எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் செவ்வி அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார் கருமமே கண்ணாயினார்'' இந்தப் பாடலை நீர்சிறுவயதில் படிக்கவில்லையா?

இதற்கு உடனடியாக அந்த மாணவன் கொடுத்தபதில் பேராசிரியரையும் அக்கூட்டத்திலே இருந்த சகதமிழ் மாணவரையும் திணறவைத்தது, அந்தப்பேராசிரியரைப் பார்த்து இப்படியொரு பதிலை உடனேசொல்ல துணிச்சலும் அறிவும் இவருக்குஎப்படி வந்தது என்று நாம வியந்தோம்'' அதைக்கேட்ட பேராசிரியர், 'சரி நீர்கன்டீனுக்குப் போய் விட்டு வாரும்' என்று வேலாயுதபிள்ளையை அனுப்பிவிட்டு அவர் கூறிய பதிலை சிங்கள மாணவருக்கு விளக்கினார். பள்ளிக்கூடத்தில் படித்த காலத்தில் அங்கே இயங்கி வந்த பாராளுமன்றத்திலே பிரதமமந்திரியாக விளங்கிய வேலாயுதபிள்ளை கொடுத்த பதில் இதுதான்: ''ஓம் சேர், அந்தச் செய்யுளை நான்படித்திருக்கிறேன். அதேவேளையில் ஔவையாரின் இன்னொரு செய்யுளையும் படித்திருக்கிறேன். அதைக்கேளுங்கள்:

'மானம் குலம்கல்விவண்மை அறிவுடைமை
தானம் தவம் முயற்சி தாளாண்மை-தேனில்
கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
பசிவந்திடப் பறந்துபோம்.

இனி அடுத்தபுதன் சந்திப்போம்.


குறெஸ் ட்ரவல் சேர்விசஸ் [பிறைவேற்] லிமிட்டெட்

நீங்கள் வெளிநாடு செல்லவேண்டுமா?

கொழும்பு சென்று பிரயாண ஒழுங்குகள் செய்ய வேண்டுமா?
என்ற கவலையே வேண்டாம்!

உலகின் எப்பாகத்திற்குச் செல்ல வேண்டுமானாலும் உங்கள் பிரயாணச்சீட்டுக்களை இன்றே யாழ். நகரிலேயே பதிவு செய்துகொள்ள உடன் எமது ஸ்தாபனத்தை நாடுங்கள்.

குறிப்பு: பிரான்ஸ், இத்தாலி, கனடா செல்வதற்கான விசா, பயணச் சீட்டுக்கள் மற்றும் சகல ஒழுங்குகளும் மிகக்குறைந்த கட்டணத்தில் செய்து கொடுக்கப்படும்.

Cross Travel Services (Pte) Ltd.
PASSENGER SALE AGENT FOR SWISSAIR
Telephone: No: 22040, 22065.
TELEX No. 22207 (C. T. S) C E
CTS

எமது ஸ்தாபனத்தின் இணைந்த சேவையாக தற்பொழுது "குறெஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை" ஆரம்பித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

* வெளிநாட்டிலுள்ள உங்கள் உறவினருடன் தொடர்பு கொள்ள வேண்டுமா? உங்கள் இல்லங்களிலுள்ள தொலைபேசியிலேயே உறவாடி மகிழ்ந்திட எம்மை நாடுங்கள்.
* உலகின் சகல பாகங்களுக்கும் குறைந்த கட்டணத்தில் நேரடித் தொலைத் தொடர்பு சேவையையும், டெலெக்ஸ் சேவையையும் ஒரு நொடிப்பொழுதில் தாமதமின்றி பெற்றுக்கொள்ளலாம்.

Cross International
Telecommunication
Services
(குளிரூட்டப்பட்டது–பஸ்நிலையம்
முன்பாகவுள்ள மேல்மாடி)
STAGE II. MODEL MARKET
No, 5, 1st FLOOR
BUS STAND CENTRE ROAD, JAFFNA.
Phone No: 22040, 22065. Telex No: 22207 (C, T, S,) C E

# இன்றைய பலன்

மாதம்: ஆடி
திகதி: 3 (18-7-1984)
வாரம்: புதன்
திதி: பஞ்சமி பிற்பகல் 2-56 வரை
நக்ஷத்திரம்: பூரட்டாதி பிற்பகல் 5-28 வரை

மேடம்: இன்று அதிர்ஷ்டகரமான தினம் செய்தொழிலிலும் சிறப்புண்டு புத்திர வழியாலும் போற்றத்தக்க முன்னேற்றம் உண்டு.

இடபம்; இன்று எதிர்பாராத தொழில் வருவாய்க்கும் இடம் உண்டு, இல்லத்திலும் இனிமை தவழும் எதிர்பார்த்த காரியத்தில் நல்லதிருப்பம் ஏற்படும் தாய்வழியாலும் உதவியுண்டு.

மிதுனம்: பிதாவழி மூலம் வரவிற்கும் இடமுண்டு சகோதர வழியாலும் மகிழ்ச்சியுண்டு முன்னேற்றம் தடைப்படும் பணவிடயத்தில் மந்தம் ஏற்படும்.

கடகம்: தன்கையே தனக்குதவியென்று செயலாற்றவும் இன்று மிகவும் பொறுப்பு வாய்ந்ததாக இருக்கும், எனினும் நண்பர்ளால். உதவி கிடைக்கும்.

சிங்கம்: குடும்பவழியால் மகிழ்ச்சி ஏற்படும் புத்திரவழியாலும் சிறப்புண்டு தொழிலில் மந்தநிலை ஏற்படும் உடல் நலத்தைப் பேணவும்.

கன்னி; இன்று அவதானமாக நடந்து கொள்ளவும். கருத்து மோதல்கள் ஏற்படலாம் கொடுக்கல் வாங்கலிலும் நிதானம் வேண்டும். பகைமைக்கு இடங்கொடாமல் பொறுமையுடன் நடந்து கொள்ளவும்.

துலாம்: எண்ணம்போல் இன்று யாவும் நடக்கும் புத்திரவழியாலும் சிறப்புண்டு எதிர்த்தவர்கள் மீண்டும் இணைவர்.

விருச்சிகம்: இன்று பொருள் விடயங்களில் கவனம் வேண்டும் தொழில் விடயத்திலும் உற்சாகம் குன்றும் வரவிலும் மந்தநிலை தென்படும்.

தனுசு: சகோதரவழியால் வரவுமுண்டு முன்னேற்றம் மந்தமாக இருக்கும். முயற்சிக்கு உகந்த தினம் பிதாவழிமூலம் நற்செய்தியும் கிடைக்கும்.

மகரம்: இன்று சமவருவாய்க்கு இடமுண்டு வாழ்க்கையில் வசந்தம் தோன்றும் உடன் பிறப்புக்களுடன் பகைமை ஏற்படும் பொறுமை வேண்டும்.

கும்பம்: இன்று எதிரிகள் குறுக்கிடுவர். எதிலும் சமயோசிதம் வேண்டும். வாய்வுக் கோளாறு ஏற்படும் உணவு விடயத்தில் கவனம் வேண்டும்.

மீனம்: இன்று எண்ணம் போல் எதுவும் நடவாது நன்மை செய்தாலும் தீமை கிடைக்கும் எக்காரியம் செய்வதாயினும் சிந்தனைக் கிணங்கிய முடிவெடுத்து நடந்து கொள்ளவும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## ரூபவாஹினியில் இன்று

மாலை
5-30 நாட்டு வளம் கதிர்காமம் (தமிழ்)
5-35 'கிரேஸ்பேஸ்கோஸ்ரர்' (ஆங்கிலம்)
6-00 விஞ்ஞான நிகழ்ச்சி (சிங்களம்)
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 தகவல் நிகழ்ச்கி (சிங்களம்)
7-45 இசை நிகழ்ச்சி
8-15 செய்திகள் (சிங்களம்)
8-55 திரைப்படம்
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 திரைப்படத்தொடர்ச்சி
10-30 உலகச் செய்திகள்
10-35 திரைப்படத் தொடர்ச்சி
11-30 நிகழ்ச்சிகள் முடிவு

## தொலைக்காட்சி யமனாகியது

(பச்சிலைப்பள்ளி)

தொலைக்காட்சி பார்க்கச் சென்றதை தந்தை கண்டித்ததினால் மனமுடைந்த மைந்தன் தாய் முன்னிலையில் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

பளையிலுள்ள களுதாவளை என்னுமிடத்தைச் சேர்ந்த செல்லத்துரை பிரேமதாசா (வயது17) என்ற இளைஞரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவர்.

பளைப் பகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு எம் குமாரவேலு மரணவிசாரணையை நடத்தித் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

சாவகச்சேரி பொலிஸ் கான்ஸ்டபிள் நாதன் சாட்சிகளை ஆஜர் செய்திருந்தார்.

## யாருடையது

யாழ்ப்பாணம் ஸ்ரேசன் வீதியைச் சேர்ந்த திரு. குமாரசிங்கம் என்பவர் ஒரு மூக்குக் கண்ணாடியையும், திரு. வரதன் என்பவர் யாழ். மானிப்பாய் வீதியைச் சேர்ந்த செல்வி நடராசா சிவனேஸ்வரியின் அடையாள அட்டையையும் கண்டு எடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள். உரியவர்கள் அலுவலகநேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

## போக்குவரத்து பாதிப்பு

(பச்சிலைப்பள்ளி)

பளைக்கும் கொடிகாமத்திற்குமிடையிலுள்ள கண்டி வீதியில் பாரிய திருத்த வேலைகள் இன்னும் செய்து முடிக்கப்படாதினால், வாகனப் போக்குவரத்துக்கு பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது.


கடந்த ஆண்டு பெய்த பெருமழையினால் இவ் வீதி பெரும் சேதத்திற்குட்பட்டது.

## இன்றைய வானொலியில்

காலை
5-30 நாதாஞ்சலி
5-35 தோத்திரமாலை ஸ்ரீ லஷ்மி தோத்திரம்
6-00 சைவநற்சிந்தனை
6-05 இஸ்லாமிய நற்சிந்தனை
6-10 அறநெறி ஆரம் எஸ். அருள்மணிநாதன்
6-25 நிகழ்ச்சி முன்னோட்டம்
6-30 செய்திகள்
6-40 அறிவிப்புகள்
6-50 மெல்லிசைப் பாடல்
7-00 பாட்டு வி. செல்லத்துரை
7-30 மாகாணச் செய்திகள்
7-35 இசையமுதம்
8-05 வாத்திய விருந்து
8-15 முஸ்லீம் நிகழ்ச்சி
8-45 காலை ஒலிபரப்பு முடிவு

மாலை
6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 அருளமுதம்
6-30 குன்றின் குரல் எஸ். அழகுப்பிள்ளை

இரவு
7-00 களத்துமேடு
7-15 நாடகம் ''உண்மை உதயமான போது'' ஜமுனாராணி நடராஜா
7-30 உலகச் செய்திகள்
7-40 நாட்டுப்பாடல்
7-45 பேச்சு ''சுவாமிவிபுலாநந்தர் - நினைவுதின பேச்சு கௌரவ அமைச்சர் செ. இராசதுரை
8-00 முஸ்லீம் நிகழ்ச்சிகள்
9-00 செய்திகள்
9-01 செய்தியின் பின்னணியில்
9-15 அறிவிப்புகள் வாத்திய இசை
9-30 கலைக்கோலம்
10-00 தாளவாத்தியக் கச்சேரி அ. கணேசசர்மா
10-30 குரல் வகை
11-00 ஒலிபரப்பு முடிவு



## நியமனம்

பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்த திரு. இராமநாதன் சிவகுமாரன் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றப் பகுதிக்கு நீதிமன்ற விற்பனை ஆணையாளராகவும் விலைமதிப்பாளராகவும், பிரசித்த ஏல விற்பனையாளராகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

முன்னாள் திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். இராமநாதனின் புதல்வனான திரு. சிவகுமாரன், பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி ஆகியனவற்றின் பழைய மாணவருமாவார்.

## சாரணர் ஜம்போறி

(புலோலி)

ஜப்பான் நிப்பனில் சிரேஷ்ட சாரணர் ஜம்போறி இம்மாதம் 20ம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 11ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த சிரேஷ்ட சாரணர் ஜம்பொறியில் கலந்து கொள்வதற்காக இலங்கையிலிருந்து மூவரடங்கிய குழுவொன்று பயணமாகின்றது.

இக் குழுவுக்கு வடடக்கச்சி மகாவித்தியாலய சாரணர் குழுத்தலைவர் திரு. மா. புவனேந்திரம் தலைமைதாங்கிச் செல்கின்றார்.

இவரது தலைமையில்வட்டக்கச்சி மகாவித்தியாலயசாரணர் குழு கிளிநொச்சி மாவட்டத்தில் முதன்முறையாக உயர்ந்த சாரணர் சின்னங்களைப் பெற்றுள்ளதென்பதும், தேசிய ஜம்போறி சைக்கிள் மரதனில் அகில இலங்கையில் 2ம் இடத்தைப் பெற்றுள்ளதென்பதும் குறிப்பிடத்தக்கது.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

குளோபல்

வழங்கும்
விசேட
ரெலிபோன் சேவைகள்

உங்கள் ரெலிபோனில் வெளிநாட்டு அழைப்புக்கள்:

உங்கள் இல்லங்களில் அல்லது காரியாலயங்களில் ரெலிபோன் இணைப்பு உண்டாயின் உங்கட்குத் தேவையான வெளிநாட்டு உள்நாட்டு ரெலிபோன் அழைப்புக்களை எமது ரெலிபோன் ''சுவிச் போட்'' மூலமாகப் பெற்று உங்கள் ரெலிபோனுக்கு இணைப்புச் செய்து தருகிறோம்.

வெளிநாடுகளிலிருந்தே உங்களுக்கு ரெலிபோன் அழைப்புக்கள்:

இல்லங்களில் அல்லது காரியாலயங்களில் ரெலிபோன் இணைப்பு இல்லாத உங்களுடன் உள்நாட்டிலிருந்தோ அல்லது வெளிநாட்டிலிருந்தோ உங்கள் அன்பிற்குரியவர்கள் யாரேனும் அவசரமாக ரெலிபோனில் தொடர்பு கொள்ள விரும்பினால் நாங்கள் உங்களுக்கு தகவலனுப்பி வரவழைத்து எங்கள் பணியகத்திலிருந்தே நீங்கள் ரெலிபோன் அழைப்பெடுத்து உங்கள் அன்பிற்குரியவர்களுடன் அளவளாவவோ அல்லது அவர்கள் பிற இடத்திலிருந்தே தாமே எங்கள் பணியகத்திற்கு அழைப்பெடுத்து உங்களுடன் அளவளாவவோ வேண்டிய ஒழுங்குகள் செய்து தருவோம்.

வெளிநாட்டுத் தந்திச் சேவை:

வெளிநாட்டிற்கு நீங்கள் அவசரமாக அனுப்பவேண்டிய தந்திகளை தாமதமின்றி உங்களிடம் பொறுப்பேற்று எமது ''பிறின்ரல்'' (ரெலெக்ஸ்மூலம் தந்தியனுப்புதல்) மூலமாக துரிதகதியில் அனுப்பிவைக்கிறோம்.

ரெலெக்ஸ் ரெலிபோன் சேவை எங்களுக்கு எம்மை முழுமையாக அர்ப்பணித்த தனித்துவத் தொழிலே. ஆகையால் எங்கள் முழு அக்கறையும் உங்களுக்கு அதி சிறந்த ரெலெக்ஸ் ரெலிபோன் சேவை அளிக்க வேண்டும் என்பதே. மேற் சொல்லப்பட்ட எமது சேவைகள் அனைத்தும் இரவு பகல் 24 மணித்தியாலமும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டேயிருக்கின்றன.

குளோபல்
யாழ்ப்பாணம் கொழும்பு

யந்திர வகைகள்
குத்தகைக்கு வேண்டுமா?

இரும்புகடைச்சல் யந்திரம்
மரக்கடைச்சல் யந்திரம் (LATHE)
புதிய போக்குவரத்து வாகனங்கள்
சலவைச்சாதனங்கள் — வைத்தியசாதனங்கள்
மேலும் கைத்தொழிலுக்குத் தேவையான சாதனங்கள்

1. சொத்துக்களை நிரந்தரமாக்கிக் கொள்ள குத்தகை உன்னத வழி. அத்துடன் உங்கள் தொழிலை விருத்தி செய்ய உங்கள் நடைமுறை மூலதனம் உதவுகிறது.
2. 100% வருமான வரிச்சலுகையை உறுதிப்படுத்துவது குத்தகையே.
3. குத்தகை உங்கள் வருமானத்தை விருத்தியடையச் செய்யும். இதனால் உங்களுக்குத் தேவையில்லாத பழைய யந்திரங்களை தவிர்த்துக்கொள்ளலாம்.

த பினான்ஸ் கொம்பனி லிமிட்டெட்,
249மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23680

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி -சரோஜாதேவி
**இருவர் உள்ளம்**

**மனோகரா** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
காந்தராவ்—ராஜஸ்ரீ
**எல்லாமே பணத்துக்குத் தாண்டா**

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00
4-30, 7-00
**EXCALIBUR**
(Adults only)

**சாந்தி** (யாழ். நகர்)
10-30, 2-30, 4-45, 7-00
Kabir Bedii in
GIRL FROM INDIA
action-adults-color
new print-with
four Hindi hit songs

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
எம். ஜி. ஆர்.
ராதாசலுஜா
**இதயக்கனி**
(புதிய பிரதி)

**றீகல்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30 6-00
கமலஹாசன், ஆலம்,
வை. விஜயா
K. பாலசந்தரின்
**மன்மதலீலை**
[புத்தம் புதிய
வண்ணப் பிரதி]

**ஹரன்** (யாழ். நகர்)
16 முதல் 19 வரை
தினசரி 10-30, 2-30, 6-15
ஜெய்சங்கர்-நிர்மலா
**தாய்க்கு ஒரு பிள்ளை**
20 முதல் 30 வரை
தினசரி 10-30 a.m. 12-30
2-30, 4-30, 6-30 8-30p.m.
LADY CHATTERLEY'S
LOVER
(Strictly for Adults)
10 days

**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 6-30
ஜெய்சங்கர்-ஜெயலலிதா
**பொம்மலாட்டம்**
Coming soon
BURNING

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
10-30, 2-30, 6-30,
ஜெமினி நடித்த
பாலசந்தரின்
**நான் அவனில்லை**

**வின்சர்** (யாழ். நகர்
தினசரி 5 காட்சிகள்
13 முதல் 22 வரை
Armand Assante
Barbara Carrera
யாழ். சினிமா இரசிகப் பெருமக்கள் இதுவரையும் கண்டுகளித்திராத அற்புதத் திரைவிருந்து! நிமிடத்துக்கு நிமிடம் திகிலும் மர்மமும் நிறைந்த வியப்பான திரைவிருந்து! எதிர்பாராத தாக்கங்களும்-இன்பக் கிளர்ச்சியும் நிறைந்த ஆங்கிலப்படைப்பான
**'I The Jury'**
பார்க்கத் தவறாதீர்கள்.
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்குமட்டும்)


40 ஓவர் கிரிக்கெட் போட்டி:

# ஜொலிஸ்ரார் சாம்பியன்!

[யாழ்ப்பாணம்]

யாழ்.மாவட்டவிளையாட்டுக் கழகங்களிடையே ''ஜொலிஸ்ரார்''விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற ''40 ஓவர்'' மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியில் ஜொலிஸ்ரார் கழகம் சம்பியன் கிண்ணத்தை தட்டிக் கொண்டது. யாழ் மாவட்டத்திலிருந்து மேற்படி போட்டியில் மொத்தம் எட்டு விளையாட்டுக் கழகங்கள் கலந்து கொண்டன.

இறுதி சாம்பியன் மோதலில் ஜொலிஸ்டார் கழகமும்-யாழ்.சென்றலைட்ஸ் கழகமும் மோதிக் கெண்டன. முதலில் துடுப் பெடுத்தாடிய சென்றலைட்ஸ் கழகம் 40 ஓவர்களில் 9 விக்கெட் நஷ்டத்துக்கு 123 ஓட்டங்களைப் பெற்றது. சுதர்சன் 40ஓட்டங்களைப் பெற்றார். சிவராமன் 30 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

ஜொலிஸ்டார்கழகம்38ஓவர்களில் 8விக்கெட்டுகளை இழந்து 128 ஓட்டங்களைப் பெற்றது. அசோக்குமார் 34 ஓட்டங்களையும், கௌரிசங்கர் 21 ஓட்டங்களையும் பெற்றனர். நகுலேஸ்வரன் 28ஓட்டங்களுக்கு 3விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இப் போட்டிகள் அனைத்தும் யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (வி)

## பரு. கல்வி வட்டாரப்போட்டி 'ஹாட்லி' சாம்பியனானது

[புலோலி]

பருத்தித்துறையில் கல்வி வட்டார பாடசாலைகளுக்கிடையேயான வருடாந்த மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகள் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன

பருத்தித்துறை வட்டாரக் கல்வியதிகாரி திரு. பீ. சச்சிதானந்தம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் திரு. டபிள்யூ. என். எஸ். சாமுவேல் வேலாயுதம் ஆண்கள் மகாவித்தியாலய அதிபர் திரு. வீ. எஸ். ஏகாம்பரநாதன் ஆகியோர் விளையாட்டுப் போட்டிகளில் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். பருத்தித்துறை கல்விவட்டாரத்தில் உள்ள இருபது பாடசாலைகள் இதில் பங்குபற்றின.

15 வயதிற்குட்பட்ட பெண்கள் பிரிவில் 100 மீற்றர், 500 மீற்றர் ஓட்டங்களிலும் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் கல்லூரியைச் சேர்ந்த செல்வி எஸ். சுமதி முதலிடங்களைப் பெற்று சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

15 வயதிற்குட்பட்ட ஆண்கள் பிரிவில் 100 மீற்றர் ஓட்டம், குண்டெறிதல், பரிதி எறிதல் ஆகிய மூன்று விளையாட்டுக்களிலும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் கே.குகதாஸன் முதல் இடங்களைத் தட்டிச் சாம்பியனாகத் தெரிவானார்.

17 வயதிற்குட்பட்ட ஆண்கள் பிரிவில் 400மீற்றர் ஓட்டம் நீளம் பாய்தல் ஈட்டி எரிதல் ஆகிய மூன்று விளையாட்டுக்களிலும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் கே.அசோகன் முதலிடங்களைப் பெற்றுச் சாம்பியனானார்.

19 வயதிற்குட்பட்ட ஆண்கள் பிரிவில் மூன்று விளையாட்டுக்களில் முதலிடங்களைத்தட்டிக்கொண்ட ஹாட்லிக் கல்லூரி மாணவன் செல்வன் பி. சுதர்சன் சாம்பியனானார்.

நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் மிகக்கூடுதலான புள்ளிகளைப் பெற்ற பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

## கொலைகள்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

107. 5 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட ஆயுத முனைக் கொள்ளை, 113 பெரு வீதி வழிப்பறி, 04 வங்கிக்கொள்ளை. மொத்தம் 834 குற்றச் செயல்கள்.

## சுவிற்சர்லாந்து பயணம்

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாண மாவட்டஇந்து இளைஞர் பேரவையின் துணைத் தலைவர் திரு வி.யோகேஸ்வரன் அண்மையில்சுவிற்சர்லாந்துபயணமாகியுள்ளார்.

வர்த்தக ரீதியான தொழிற் பயிற்சியைப் பெறுவதற்குச் சென்றுள்ள இவர் இப்பயிற்சியைமுடித்தபின் நாடு திரும்பவிருக்கிறார். இந்து இளைஞர் பேரவைக்கான சில உதவிகளையும் சுவிஸ்லாந்து இந்துக்களிடம்பெறுவதற்கும் இவர் நடவடிக்கை எடுப்பார் என்று நம்பப்படுகிறது.


**இ. பாலசுப்பிரமணியம்**
சட்டத்தரணி
52 வைமன் வீதி
யாழ்ப்பாணம்

**பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்**

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் காலஞ் சென்ற நாவற்குளி, வேலம்பிராயைச் சேர்ந்த கந்தையா கனகரத்தினம் பெண் சரஸ்வதி என்பவரின் மரணசாதனத்தின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர்
கயிலாயபிள்ளை இராசையா
இல. 50, புதியவீதி அத்தியடி,
யாழ்ப்பாணம்.
மனுதார்.
மரணசாதன நியாயாதிக்கம் } இல. 3799/T

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது,

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984 ஆம் ஆண்டு யூலை மாதம் 20 ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி

கு. குலசிங்கம்
பதிவாளர்

1984 ஆம் ஆண்டு ஆனி மாதம் 6 ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.
943


## "கிராமிய அபிவிருத்தியில் பெண்கள் பங்கு அவசியம்"

(புலோலி)

''கூட்டுறவு மகளிர் குழுக்கள் சிறப்பாக இயங்கும் போது பெண்கள் பெருநன்மையடைவதுடன் கிராமஅபிவிருத்தியும் மேம்படுத்தப்படும் கிராமிய அபிவிருத்தியில் பெண்களின் பங்குமிகமுக்கியம் வாய்ந்ததாகையால் பெண்கள் பல்வேறுதுறைகளிலும் அறிவைப்பெற்றுக் கொள்ளவேண்டும்''

இவ்வாறு வலிகிழக்கு வட பகுதிபலநோக்குக் கூட்டுறவுச் சங்க தம்பாலை கூட்டுறவு மகளிர் குழுவின்தையல் பயிற்சி நிலையத்திறப்புவிழாவில் உரையாற்றிய பலநோக்குக்கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபைத் தலைவர். திரு. தி. கமலநாதன் குறிப்பிட்டார். திருமதி. கெங்காமலர் சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவிலே தொழிலதிபர் திரு. கே. கனகராசா தையல் பயிற்சியை ஆரம்பித்துவைத்தார்.

தொடர்ந்து உரையாற்றிய திரு. கமலநாதன் குறிப்பிட்டதாவது-

''பெண்கள் தொழில்நுட்பப்பயிற்சிகளைப் பெற்றிருக்க வேண்டியது இன்றையநிலையிலே மிகமுக்கியமானதாகின்றது. தையல் வீட்டுத்தோட்டம் கால்நடை வளர்ப்பு போன்ற முயற்சிகளில் பெண்கள் ஈடுபடுவதால் வருவாயைப் பெருக்கிவாழ்க்கையை வளம்படுத்த வழியேற்படும்'' என்றார்.

யாழ். தேசியகூட்டுறவு சபைச் **செயலாளர். திரு.** எஸ். சிவசுப்பிரமணியம் உதவிச்செயலாளர் திரு.கே.கணேசலிங்கம் வலிகிழக்கு (வ. ப) ப. நோ. கூ. சங்கஉபதலைவர் திரு. எஸ். தங்கவேல் தேசியகூட்டுறவு சபைபாவனையாளர் கல்விஉத்தியோகத்தர் திருமதி. ஏ. தவபாலசிங்கம் ப. நோ. கூ. சங்கபொது முகாமையாளர் திரு.எம்.ஆனந்தகிருஸ்ணன், மகளிர் குழுஅமைப்பாளர் திரு. ஏ.கந்தசாமி ப. நோ. கூ. சங்க இயக்குநர் சபைஉறுப்பினர் திரு, எஸ். குமாரசாமி, யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபை முன்னாள்தலைவர். திரு. என். இராசேந்திரம் ஆகியோரும் உரையாற்றினர்.

இங்கு தையல்பயிற்சியை மேற்கொள்வதற்கென 60 இளம் பெண்கள் தெரிவு செய்யப்பட்டனர். இத் தையல்பயிற்சி நிலையத்திற்குத் தையல்மெசின் ஒன்றை திரு. கனகராசா அன்பளிப்புச் செய்வதாக உறுதியளித்தார்.


புங்குடுதீவு – நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

**கேள்விப்பத்திரம் – படகு விற்பனை**

இரண்டு வருடம் சேவையிலுள்ள, மேற்படி சங்கத்திற்குச் சொந்தமான படகு கேள்விப்பத்திரம் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. விண்ணப்பத்திற்குரூபா 100/-ம் (மீளச் செலுத்தப்படமாட்டாது) வைப்புப் பணமாக ரூபா 2000/-ம் (மீளச் செலுத்தப்படும்) செலுத்தி சங்கத்தில் கேள்விப்பத்திரங்களைப்பெற்று 25-7-84ம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக பதிவுத்தபால் மூலம் பொது முகாமையாளர் புங்குடுதீவு - நயினாதீவு பல. நோ. கூ. சங்கம், புங்குடுதீவு. என விலாசமிட்டு அனுப்புதல் வேண்

என்வலப்பில் இடது பக்க மூலையில் ''படகுக்கான கேள்விப்பத்திரம்'' என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

**விபரங்கள்**

| | | |
|---|---|---|
| படகு நீளம் | 42' | 4½'' |
| படகு அகலம் | 12' | 2¾'' |
| படகு ஆழம் | 06' | |

புதிய யன்மார் மரைன் என்ஜின் - 3 ESDE - 56 to 85 குதிரைச் சக்தி (Horse Power)

படகைப் பார்வையிடுவதற்கும் மேலதிக விபரங்களை அறிவதற்கும் எம்முடன் தொடர்பு கொள்ளவும். ரூபா 2,00,000/-க்கு குறைந்த கேள்வி ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**பொதுமுகாமையாளர்**
புங்-நயி. பல. நோ. கூ. சங்கம்,
புங்குடுதீவு

புங்குடுதீவு,
4-7-84
742


## 31-வது நாள் நினைவஞ்சலி

### உயர்திரு. ந. மாரிமுத்து பசுபதி

தாயின் மடியில்:
12-11-1931

உதிர்வு:
18-6-1984



எங்கள் அன்புத் தெய்வமே எங்களை நல்ல நிலைக்கு உருவாக்கி, எம்மை விட்டுப் பிரிந்து இன்று முப்பத்தொரு நாளாகிறது. உங்கள் தூய ஆத்மா வழிநடத்திச்செல்ல பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
**மனைவி, தாய், மக்கள் சகோதரர்கள்.**

11, முத்தமிழ் வீதி,
கொட்டடி.
(919)

# பொலிஸ் ஜீப்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

காயமடைந்த நான்கு பொலிசாரும் உடனடியாக யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

பொலிஸ் கான்ஸ்டபிள்கள் வைத்தியநாதன் (45வயது), புவனேஸ்வரன் (25-வயது), சரத் விமலரத்ன (30வயது), ஜெயவீர (35-வயது) ஆகியோரே காயமடைந்தவராவர்.

இந்த நால்வரில் முதல் மூவரும் சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்பட்ட போதிலும் ஆபத்து எதுவும் இல்லையென்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

சில மணித்தியாலங்களுக்குப்பின்னர் இராணுவத்தினர் யாழ். நகரில் ரோந்து சுற்றினர். பொலிஸ் அதிரடிப்படை பிரிவினரும் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தனர்.

## நவீன சந்தை வைரவர்ஆலயம்சேதம்!

நவீன சந்தை கிழக்கு வீதியில் அமைந்துள்ள வைரவர் ஆலயம் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

ஆலயத்தின் கோபுரத்தில் வடக்குப்பக்கத்தில் செதுக்கப்பட்டிருந்த முருகப்பெருமானின் தலை உடைந்த நிலையில் காணப்பட்டது.

ஆலயத்தின் கதவு உடைக்கப்பட்டு மூலஸ்தானத்தில் வைக்கப்பட்டிருந்த வைரவர் சிலையும், எழுந்தருளி வைரவர் சிலையும் சேதப்படுத்தப்பட்டுள்ளதுடன் திருவாசிகளும் தீபம் போன்றவைகளும் சரிந்து சிதறுண்ட நிலையில் காணப்பட்டன.

சம்பவம் நடைபெற்ற வீதியில் உள்ள பிரபல வர்த்தக நிலையம் ஒன்றின் கதவோரத்தில்வைத்து மோட்டார் சைக்கிளுக்கு தீவைக்கப்பட்டதாகவும் பொதுமக்கள் தீயை அணைத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதே வீதியில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையம் ஒன்று சேதப்படுத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த காயமடைந்த நான்கு பொலிஸ் கான்ஸ்டபிள்களை பிரதி பொலிஸ் மா அதிபர் திரு. பிராங்டி சில்வாவும், பொலிஸ் அதிபர் திரு. ரி. இ. ஆனந்தராசா, உதவிப்பொலிஸ் அதிபர் எஸ். தவலிங்கம் ஆகியோர் சென்று பார்த்தனர்.

யாழ். நகரில் மினிபஸ்கள் வழக்கமாகத் தரித்து நிற்கும் இடத்துக்குச் செல்லாமல் சிவன்கோவில் சந்தி, வின்சர் தியேட்டர் சந்தி, வெலிங்டன் சந்தி போன்ற இடங்களில் பிரயாணிகளை ஏற்றி இறக்கிக் கொண்டிருந்தன.

வ. பி. போ. வ. சபைக்குச் சொந்தமான பஸ்கள் சிலமணி நேரம் சேவையாற்ருமலிருந்த போதிலும் 2 மணிக்குப் பின்னர் பிரயாணிகள் நன்மை கருதி தொடர்ந்து சேவையாற்றத்தொடங்கின.

## பாடசாலைகள் மூடப்பட்டன

பாடசாலைகள் ஒருமணியுடன் மூடப்பட்டன. நடைபெற்றுக்கொண்டிருக்கும் 2ம் தவணைப்பரீட்சைக்கான நேற்றைய பிற்பகல் பரீட்சை ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பாடசாலை மாணவர்களை சொந்த இடங்களுக்கு அனுப்பிவைப்பதில் மினிபஸ்கள் ஈடுபட்டிருந்தன.

சினிமாத் தியேட்டர்களில் காலை 10 மணிக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தவர்கள் இடைவேளையுடன் நிறுத்திக் கொண்டு தங்கள் இருப்பிடங்கள் நோக்கிப் புறப்பட்டனர்.

பிற்பகல், இரவுக் காட்சிகள் இடம்பெறவில்லை.

வங்கிகளில் ஊழியர்கள் கடமையாற்றிய போதிலும், வங்கிகளுக்குச் சென்ற வாடிக்கையாளர்கள், தங்கள் அலுவல்களைச் செய்யாமல் திரும்பி விட்டனர்.

யாழ். ஆஸ்பத்திரியில் தங்கியிருந்து சிசிச்சை பெற்றுவரும் நோயாளிகளில் உறவினர்களிடமிருந்து மதிய உணவைஎதிர் பார்த்திருக்கும் நோயாளிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அரசாங்க காரியாலயங்கள், கூட்டுத்தாபனங்கள், மாநகர சபை ஆகியவற்றில் கடமையாற்றியவர்களும் நண்பகலுடன் தங்கள் இடங்களுக்குத் திரும்பியதால் வெறிச்சோடிக் காணப்பட்டன.

நண்பகல் பரபரப்பேற்பட்ட போதிலும் பிற்பகல் பொதுமக்கள், வாகனங்களின் நடமாட்டங்கள் சற்றுக்காணப்பட்டது குறிப்பிடத்தக்கது.

நண்பகலில் மூடப்பட்டிருந்த சிற்றுண்டி, உணவுக்கடைகள் சில திறந்திருந்தன. சில ஒற்றைக் கதவில் இருக்கக் காணப்பட்டன. (மா)

## நீலாயதாட்சி...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

வரும் ஞாயிற்றுக்கிழமை காலை பத்துமணிக்கு கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகிறது 30ம்திகதி காலை தேர் உற்சவமும்31ம் திகதி காலை தீர்தோற்சவமும் நடைபெறுகிறது.

## வண. பாலசூரியா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று பௌத்த பிக்குகள், சமயத் தலைவர்கள் உட்பட 11 பேர் உள்ளனர்.

இக்குழுவினர் கடந்த இரு தினங்களாக, யாழ்ப்பாணத்திலுள்ள சமய ஸ்தாபனப்பிரதிநிதிகளையும், பொதுமக்களையும், குறிப்பாகப் பாதிக்கப்பட்டவர்களையும் நேரில் சந்தித்துக் கலந்துரையாடினர்கள்.

# இப்படியும் நடக்கிறது

யாழ்ப்பாணத்துக்கும், பேராதனைக்கும் என்ன ஒற்றுமை இருக்கிறது?

விஷயம் தெரிந்தவர்கள் உடனடியாகச் சொல்வார்கள்.... பல்கலைக்கழகங்கள் என்று. ஆனல் இந்த விஷயத்திலும் சில விபரீதங்கள் தலைதூக்கியுள்ளன.

பல்கலைக்கழகப் பரீட்சை அனுமதிப்பத்திரம் பெறுவது சம்பந்தமாக தெல்லிப்பளையைச் சேர்ந்த ஓர் மாணவி பதிவுத் தபால் மூலம் பேராதனை பீடாதிபதி அலுவலகத்துக்கு விண்ணப்பித்த கடிதம், என்ன நடந்ததோ தெரியவில்லை; யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு வந்து சேர்ந்துவிட்டது.

இது பின்னர், யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி அலுவலகத்தில் பணிபுரியும் ஓர் அம்மணி மூலமாக பேராதனைக்கு அனுப்பப்பட்டது ஓர் புறம் இருந்தாலும்; தமிழர் என்ருல் யாழ்ப்பாணம் என்பது மேலும் உறுதிப்படுத்தப்படுகிறதா என்ன?

★ ★ ★

யாழ்ப்பாணம் நீராவியடியில், ஓர் பிரியமன வாசகர் வட்டம் இருக்கிறது.

இந்த வட்டத்தின் வாசகர் ஒருவர் கடந்த வாரம் 'வட்ட அக்கா'வுக்கு அனுப்பி வைத்த கடிதம் இது:

''...அன்புள்ள அக்கா அறிவது; நான் முன்னர் உங்களின் வட்டத்தில் உறுப்பினராக இருந்தபோது உங்கள் புத்தகங்களில் சிலவற்றை (விரும்பி) திருடி விட்டேன். மன்னிக்கவும் இதற்காக நஷ்டஈடாக இத்துடன் ஐம்பது ரூபா அனுப்பிவைக்கின்றேன். தயது செய்து ஏற்றுக் கொள்ளவும்.''

'ஊடுருவி'

## யாழ்ப்பாண...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

எங்களுக்கு மக்கள் நடந்தவற்றை நேரில் அறிவிக்க முன் வரவேண்டும்'' என்ருர்.

பிஷப் அம்பலவாணர் பேசுகையில், சமயம் மக்களை ஒற்றுமைப்படுத்துவதற்கே உதவ வேண்டுமென்றும், மக்களைப் பிரித்துவைப்பதற்குச் சமயம் பயன்படக்கூடாதென்றும் கூறினுர்.

திரு. சண்முகசுந்தரம் பேசுகையில், இங்குள்ள நிலைமைகளை நேரில் பார்த்து அறிந்த பின் நல்ல சூழ்நிலையை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ருர்.

திரு. விசுவலிங்கம் பேசுகையில், இப்பகுதியில் பதற்றநிலையைப் போக்க உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ருர்.

காலதாமதம் ஏற்பட்டால், மருந்து கொடுப்பதற்குத் தாமதித்ததால் நோயாளி மரணமான கதையாகவே மாறிவிடுமென்றும் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் அவர் மேலும் கூறினுர்.

யாழ். பிரஜைகள் குழுச் செயலாளர் திரு. ஆர். பாலசுப்பிரமணியம் கூறியதாவது:-

''சமயத் தலைவர்கள் அரசியலில் ஈடுபடாமலிருப்பது நல்லதொரு முடிவைக் கொண்டுவர உதவும். சமயஸ்தாபனம் சமாதானம், அமைதியை நிலைநாட்டச் செயற்படலாம். அரசியல் தீர்வு எப்படி இருக்கவேண்டும் என்பதை முடிவுசெய்ய அரசியல்வாதிகள்,அரசியல் அறிந்த பெரியவர்களிடம் விட்டுவிட வேண்டும்.

''யாழ்ப்பாண மக்கள் பயங்கர சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிருர்கள். வாழ்க்கை நடத்தமுடியாத நிலையில் இருக்கிருர்கள். சொந்த அலுவலுக்குக்கூட வீட்டைவிட்டு வெளியேறமுடியாத நிலையில் இருக்கிருர்கள். தொழிலுக்குச் செல்வது நிச்சயமற்றிருக்கின்றது. காலையில் வீட்டிலிருந்து புறப்பட்டால் மாலையில் வீடு திரும்புவது சந்தேகமாக இருக்கிறது. இந்த நிலைமையை உடன் போக்கவேண்டும்.

''வன்முறை என்பது எவருக்கும் முன்னர் தெரியாது. முதன்முதலில் வன்முறையை ஆரம்பித்து வைத்தது அரசு தான். 1956ல் காலிமுகத்திடலிலும், பின் 1958, 1977, 1983ல் வன்முறைகளை அரசு கையாண்டது. அகிம்சை முறையில் தமிழ்மக்கள் நடத்திய போராட்டத்தை அரசு வன்முறையால் முறியடித்தது. தொண்டர்கள் உயிரிழந்தனர். இதன் காரணமாகத்தான் அகிம்சை முறையில் நம்பிக்கை இழந்தமக்கள் இப்படியான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். சாத்வீகப் போரில், தொண்டர்கள் உயிரிழக்கிருர்கள். இதற்குப் பொறுப்பாகஉள்ள அரசு. முதலில் அப்படியான நடவடிக்கைகளைக் கைவிடவேண்டும்.

அமைதிகாணவிரும்பியும், நீங்கள் இதில் முயற்சி எடுக்க வேண்டும்'' என்று கூறினுர்.

மற்றும் பலர் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர். (க)

## மரண அறிவித்தல்

### அந்தோனிப்பிள்ளை செல்வநாயகம்

வவுனியா இளமருதங்குளத்தைச் சேர்ந்த சாரதிகள் பயிற்சி நிலைய உரிமையாளரும், முன்னைநாள் கிராமசபை உறுப்பினருமாகிய திரு. கணபதி அந்தோனிப்பிள்ளை செல்வநாயகம் 16-7-84 திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானுர். இவர் திரு. கணபதி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், அருளம்மாவின் அன்புக்கணவரும், சசிரேகா, றெசின்ரன், றெமிங்ரன் ஆகியோரின் அன்புத்தந்தையும், திரு. அருளானந்தம் திருமதி இரத்தினம் குணம் ஆகியோரின் அருமைச்சகோதரருமாவார். அன்னுரின் பூதவுடல் இளமருதங்குள இல்லத்தில் இருந்து நல்லடக்கத்துக்காக 18-7-84 புதன்கிழமை இன்று பி. பகல் 4 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகிருர்கள்.

942

## மரண அறிவித்தல்

### J. M. இராஜரத்தினம்

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் முன்னைநாள் மனேஜரும். யாழ். அத்தியட்சாதின வைத்தியசாலைகள் இணுவில், மானிப்பாய் முன்னைநாள் செயலாளரும், காலம்சென்ற E. J. இராசரத்தினம் C. C. S. இன் மூத்தமகனும், இராசமலர்(விக்னேஸ்வரா வித்தியாலயம் நல்லூர்ஆசிரியை) இன் அன்புக் கணவரும், விற்றி (இங்கிலாந்து), சுரேஷ் (இலங்கைப் புகையிலைக் கம்பனி), சுகந்தன் (வர்த்தக வங்கி-கொழும்பு), கிறிஷாந்கி, துஷான் (பரி. யோவான் கல்லூரி மாணவன்) இன் தகப்பனுரும், ஜூடி (Judy) (இங்கிலாந்து), டாக்டர் வசந்தகுமார் (புருனே) இன் மாமனுரும், சட்டத்தரணி ஜிம்மி இராசரத்தினம். இம்மானுவேல் மகிழாரூபியம், ரூபாவதி, சோமாவதி (Lechelles), சுமந்திரன், இந்திரன் (அமெரிக்கா) இன் சகோதரனும் ஆவார். இவரின் மரண ஆராதனை புதன்கிழமை ஜுலை 18-ம் திகதி இன்று பிற்பகல் 3.30 மணிக்கு 57, றக்கா ஒழுங்கை சுண்டிக்குளியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுப்பின் நல்லூர் பரி. யாக்கோபு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

939

## மரண அறிவித்தல்

### திருமதி றெஜினு சந்தியாப்பிள்ளை

திருமதி றெஜினு சந்தியாப்பிள்ளை காலமானுர். இவர் காலஞ்சென்ற ஏ. சந்தியாப்பிள்ளை (மலேயன் பென்சனியர்) அவர்களின் அன்பு மனைவியும், டெய்சி, இம்மனுவேல் (இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்), கொன்சி, பேர்லி (கனடா), சேவியர் (இலங்கை மத்திய வங்கி), அல்பேர்ட் (ஆசிரியர், சம்பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், நவரெட்னம் (முன்னுள் கணக்காளர், ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபை), திரு. துரைரெட்னம் (மதிப்பீட்டாளர், மாநகரசபை கொழும்பு), பிரிகேடியர் ஏ. பி. ஆர். டேவிட் பெல்[கனடா], குளோடியா, ரஞ்சி ஆகியோரின்அன்பு மாமியாரும் ஆவார்.இவரின் பூதவுடல் யாழ்.கொஞ்சேஞ்சிமாதாசேமக்காலைக்கு இன்று18-7-84 மாலை 4-00 மணிக்கு அன்னுரது இல்லத்திலிருந்து இறுதிக் கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

தகவல்: அல்பேர்ட் சந்தியாப்பிள்ளை
சம்ரேக் வில்லா,
6-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 950

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் இராசரத்தினம்

சுன்னுகத்தைச் சேர்ந்த திரு. நாகலிங்கம் இராசரத்தினம் அகால மரணமானுர். இவர் பாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை (டாக்டர்) அவர்களின் மருமகனும், தம்பிரத்தினம், இராசம்மா ஆகியோரின் சகோதரரும், உருத்திர தேவி' புவனதேவி, ஜெயதேவி (இராமநாதன் கல்லூரி), மகேஸ்வரன் (மகாஜனக் கல்லூரி) ஆகியோரின் தந்தையும், சி. துரையப்பாவின் மைத்துனரும், இராசநாயகம், பரமநாயகம், பாலசுப்பிரமணியம் (கௌரி ரிராவெல்ஸ் உரிமையாளர்), விமலாதேவி ஆகியோரின் மாமனுரும் ஆவர். அன்னுரின் ஈமச் சடங்குகள் இன்று (18-7-84) 2-00 மணியளவில் சுன்னுகத்தில் நடைபெறும். உறவினரும், நண்பர்களும் இதை ஏற்றுக்கொள்ளவும்.

அறிவிப்பவர்: மா. நடராசா, கந்தரோடை.

951

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஜுலை மாதம் 18ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.